யாழ்ப்பாண பொதுநூலகம்

விலை ரூபா 1-25

ஈழநாடு

NATIONAL THAMIL DAILY

மலர் 28 சித்திரை 12 ஷஃபா 15 இதழ் 73

யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 25-4-1986

## "அரசியல் கைதிகள் அந்தஸ்து வழங்குக"

### நீதியமைச்சருக்கு வண.பிதா சிங்கராயர் கடிதம்

[கொழும்பு]

''வெலிக்கடைச்சிறைச்சாலையில் தமிழ் வார்ட்டில் அனுமதிக்கப்பட்டுள்ளதமிழ்க்கைதிகளுக்கு அரசியல் கைதிகளுக்கான அந்தஸ்து வழங்கப்பட வேண்டும்'' என்று கோரித் தற்போது தடுப்புக் காவலிலுள்ள அருட்தந்தை சிங்கராயர், நீதி அமைச்சர் கலாநிதி நிஸங்கா விஜயரத்திணவுக்கும், ஆயர் மன்றத் தலைவர் அதிவண. மார்க்கஸ் பெர்ணன்டோவுக்கும் கடிதங்கள் அனுப்பி வைத்துள்ளார்.

வண. சிங்கராயர் அனுப்பி வைத்துள்ள கடிதங்களில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

''வெலிக்கடைச் சிறைச்சாலையிலுள்ள தமிழ்க் கைதிகளை அரசியல் கைதிகளாகக் கணித்து, அவர்களுக்கு அரசியல் கைதிகளுக்கான அந்தஸ்து வழங்கப்படவேண்டும்.

''அத்துடன் இங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகள் அனைவரும் தங்கள் மதங்களை அனுட்டிப்பதற்கு வசதிகள் செய்து கொடுக்கப்படவேண்டும்.

''இராணுவ முகாம்களில் நடைபெறும் தமிழ்க் கைதிகளுக்கான அட்டூழியங்கள் நிறுத்தப்படவேண்டும்.

''எமக்கு நாள்தோறும் தினசரிகள் வழங்கப்பட்டுவருகின்றபோதிலும் அவற்றில் முக்கிய செய்திகள் வெட்டப்பட்டே தரப்படுகின்றன. வானொலிச் செய்திகளும் கேட்பதற்கு அனுமதிக்கப்படுவதில்லை. அவை நிவர்த்தி செய்யப்படுவதுடன், தமிழ்க்கைதிகள் சார்பாக ஒரு நலன்புரிச் சபையை அமைக்கவும் எமக்கு அனுமதி அளிக்கவேண்டும்.

(5ம் பக்கம் பார்க்க)

● கிழக்கு மாகாணத்தின் பழம் பெருமைமிக்க

# மண்டூர் கந்தசுவாமி கோவில் சேதம்; பொருள்கள் சூறை

## மாரியம்மன் கோவிலிலும் படையினர் கைவரிசை

(மட்டக்களப்பிலிருந்து நமது நிருபர்)

**மட்டக்களப்பில் பிரசித்திபெற்ற மண்டூர்க்கந்தசுவாமி கோவிலும் பழம் பெருமைமிக்க மாரியம்மன் கோவிலும் சேதப்படுத்தப்பட்டதுடன் இக்கோவில்களிலிருந்து ரொக்கப்பணமும் நகைகளும் சூறையாடப்பட்டுள்ளன.**

**திடீர் தேடுதல் வேட்டையிலீடுபட்டிருந்த ஆயுதப்படையினரே இந்த நாசகாரச் செயலில் ஈடுபட்டதாகப் புகார்செய்யப்பட்டுள்ளது.**

ஆயுதப்படையினரின் இந்த அனர்த்தங்கள் குறித்து மண்டூர்ப் பிரதேச சபைத் தலைவர் திரு. செழியன் பேரின்பநாயகம் கிராமோதயசபைத் தலைவர் திரு பேரின்பம் ஆகியோர் மட்டக்களப்பு அரசாங்கஅதிபருக்குப் புகார் செய்ததுடன், மட்டக்களப்பு முதல் எம். பியும், இந்து கலாசார அமைச்சருமான திரு. செ. இராசதுரைக்கும் மற்றும்பாதுகாப்பு அதிகாரிகளுக்கும் அவசரத்தந்திகள் அனுப்பிவைத்துள்ளனர்.

மண்டூர்க் கந்தசுவாமிகோவிலின் யாகசாலை - பொக்கிஷ அறை களஞ்சியம், வாகன சாலை ஆகியன உடைக்கப்பட்டுச் சேதமாக்கப்பட்டுள்ளன.

கதிர்காமம் போன்று திரை திறவாமல் பூஜை நடைபெறும் இவ்வாலயத்தின மூலஸ்தானத்துக்குள் அத்துமீறிப் புகுந்து அங்கிருந்த பழைமைமிகக இரு அலுமாரிகள் உடைக்கப்பட்டுள்ளன அவற்றுள் இருந்த விலையுயர்ந்த பொருள்கள், ஆலய தஸ்தாவேஜுகள் காணமல்போய் உள்ளன.

பொக்கிஷ அறைக்குள்ளிருந்த உண்டியல் உடைக்கப்பட்டு 15ஆயிரம் ரூபாகொள்ளை அடிக்கப்பட்டதாக தெரிவித்துள்ளார்கள்.

முழுமையான பொருட் சேதங்கள் பற்றி இன்னமும் கணக்கிடப்படவில்லையாம்.

மாரியம்மன் கோவிலிலிருந்த பெறுமதியான நகைகளும் கொள்ளை அடிக்கப்பட்டுள்ளதாகப் புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (மா)

## கொழும்பில் அன்னை திரேசா

(கொழும்பு)

அன்னை திரேசா தனிப்பட்ட விஜயமொன்றினை மேற்கொண்டு நேற்றுக்கொழும்பு வந்து சேர்ந்துள்ளார்.

நாளை சனிக்கிழமை வரை கொழும்பில் தங்கியிருக்கும் அன்னை பல சமூக ஸ்தாபனங்கள், அநாதை இல்லங்கள் ஆகியவற்றுக்கு விஜயம் செய்யவுள்ளதுடன் அகதிகள் முகாம்களையும்சென்றுபார்வையிடலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ய-ரா)

## வின்ட்ஸர் சீமாட்டி காலமானர்

(ராய்ட்டர்)

பிரித்தானியாவின் எட்டாவது எட்வேட் மன்னரின் மனைவி வின்ட்ஸர் சீமாட்டி தனது 83 வயதில் பாரிஸிலுள்ள அவரது இல்லத்தில் நேற்றுக் காலமானர், [பி]

## புதியயோசனைகள்: கூட்டணி நிராகரித்தது

[ராய்ட்டர்]

இலங்கை அரசாங்கம் இனப் பிரச்னை தீர்வு குறித்துப்புதிதாகத் தெரிவித்த யோசனைகளை தமிழர் விடுதலைக் கூட்டணி நிராகரித்துவிட்டது.

இலங்கையின்புதியயோசனைகள் தெளிவற்றிருப்பதாகவும், இவற்றில் எதுவும் புதிதாக இல்லையெனவும் தமிழர் விடுதலைக்கூட்டணி செயலாளர் நாயகம் திரு அ. அமிர்தலிங்கம் பத்திரிகையாளர்களிடம் கருத்து வெளியிட்டார்.

திரு. அமிர்தலிங்கம் இலங்கையின் புதிய யோசனைகள் குறித்து இந்திய வெளியுறவுக் கொள்கைத்தலைவர் திரு ஜி. பார்த்தசாரதி, முன்னாள் இந்திய வெளியுறவுச் செயலாளர் திரு. ரொமேஷ் பண்டாரி,

(5ம் பக்கம் பார்க்க)

## இருவர் சுட்டுக் கொலை; 30 வீடுகள் தீக்கிரை

[மட்டக்களப்பு]

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள 5 விவசாயக்கிராமங்களில் சோதனை நடாத்திய ஆயுதப்படையினர் 30 வீடுகளுக்குத் தீவைத்து எரித்ததாகத் தெரியவருகிறது

நேற்றுமுன்தினம் இப்பரிதாபசம்பவம் இடம்பெற்றது.

எரிக்கப்பட்ட வீடுகளுக்குள்ளிருந்த நெல்மூடைகளும் தீயினால் எரிந்துள்ளனவாம்.

இச்சம்பவத்தைத் தொடர்ந்து பாதிக்கப்பட்ட அக்கிராம மக்கள் காடுகளுக்குள் தஞ்சம் அடைந்துள்ளனர்

புலிபாய்ந்தகல், பரவை,

(5ம் பக்கம் பார்க்க)

## யாழ். - கொழும்பு பஸ் லொறிசேவை

(யாழ்ப்பாணம்)

இன்று யாழ்-கொழும்பு பஸ் சேவைநடைபெறலாமெனஎதிர்பார்க்கப்படுகிறது நிலைமை சீராகும்பட்சத்தில் இன்று இச்சேவை நடத்தப்படுமென்றும் இன்று கொழும்பு செல்வதற்குப் பலர் பணம் செலுத்தியுள்ளதாகவும் மானிப்பாய் வீதியிலுள்ள தனியார் பஸ் சேவை நிறுவனம் தெரிவித்தது.

[5ம் பக்கம் பார்க்க]

## அநுராதபுரம் குண்டுவெடிப்பு: ஈரோஸ் உரிமை கோருகிறது

# "அரசின் ராணுவ போக்கிற்கு எச்சரிக்கை நடவடிக்கை"

(யாழ்ப்பாணம்)

அநுராதபுரம் பெற்றோல் களஞ்சிய தகர்ப்புக்கு ஈழப் புரட்சி அமைப்பு (ஈரோஸ்) உரிமைகோரியுள்ளது இதுசம்பந்தமாக இவ்வமைப்புவிடுத்துள்ள அறிக்கையில்,

''அநுராதபுரம் குண்டு வெடிப்பு நடவடிக்கை அரசின் இராணுவத்தீர்வை நோக்கிய அண்மைகாலப்போக்குகளுக்கு எச்சரிக்கை செய்யும் நோக்கிலேயே மேற்கொள்ளப்பட்டது'' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

''அநுராதபுரம் பெற்றோலிய களஞ்சிய தகர்ப்பு ஓர் எச்சரிக்கை நடவடிக்கை'' என்று தலைப்பிடப்பட்டுள்ள அந்த அறிக்கையில் மேலும்தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

அநுராதபுரம் பெற்றோலியக்களஞ்சியத்தில் புதன் அதிகாலை விசேட இரசாயனப் பொருட்களுடன் கலந்துவைக்கப்பட்ட வெடி பொருள் பொதி புதன் பிற்பகல் வெடித்ததனால் இக்களஞ்சியம் முற்றாகத்தகர்க்கப்பட்டுளளது. வட பகுதியில் இருந்து சென்ற பவுசர் வெடித்தனாலேயே இத்தகர்ப்பு நிகழ்ந்ததாகக் கூறப்படும் செய்தி முற்றிலும் தவறானதாகும்.

[1 திருகோணமலை, மூதூர் மாவட்டங்களில் நிலைகொண்டுள்ள தமிழ் அகதிகளை வட பகுதியை நோக்கி விரட்டியடிப்பது நிறுத்தப்படுவதுடன் தீகவாவியில் சிங்களக்குடியேற்றத்தை வலுவடையச் செய்வ

[8ம் பக்கம் பார்க்க]

## சேதம் 35 லட்சம்: அரசு அறிக்கை

[கொழும்பு]

அநுராதபுரம் குண்டுவெடிப்புச் சம்பவத்துக்குத் தமிழத் தீவிரவாதிகளே காரணம் என்ற அரசு தரப்பில் கூறப்பட்டது.

இச் சம்பவத்தில் பலியானவர்களில் ஐந்துபேர் தமிழர்களென்றும் நால்வர் கூட்டுத்தாபன ஊழியர்களான சிங்களவர்களென்றும் தெரிவிக்கப்படுகிறது சம்பவத்தைத் தொடர்ந்து தப்பிச் சென்ற ஒரு தமிழர் மதவாச்சியில் கைது செய்யப்பட்டாராம்.

இக்குண்டு வெடிப்பில் கூட்டுத்தாபனத்தின் பல கட்டிடங்கள், எண்ணெய் உபகரணங்கள். காரியாலயப் பத்திரங்கள் யாவும் எரிந்து சாம்பலாகிவிட்டதாகவும்இதன்சேத விபரம் சுமார் முப்பது லட்சம் என்றும் தெரிவிக்கப்பட்டது.

அநுராதபுரம் பெட்ரோல் களஞ்சியம் சீரமைக்கப்படும் வரை வடமாகாணம். வட மத்திய மாகாணம் ஆகியவைகளுக்கான எண்ணெய் விநியோகம் குருநாகலைக் களஞ்சியத்திலிருந்தே நடைபெறும். [ரா]

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள வாடகைக்கு விடக்கூடிய றிச்சட் பீரிஸ் 150 இரும்புக் கதிரைகள் உடன்விற்பனைக்குண்டு. க. தங்கத்துரை, தேநீர்க்கடை, வியாபாரிமூலை, பருத்தித்துறை. (C 1974)

Morris Minor Car எஞ்சின் (Engine) 1000 Model நல்ல நிலையில் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்புகொள்ளவும்: CITY SHOP, 18/2, விதானையார் வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம். (C 1973)

''புறொயிலர்'' இறைச்சிக் கோழி விற்பனைக்குண்டு தொடர்பு: கு. இராசரத்தினம், ஆனந்தநிலையம், நவிண்டில், கரவெட்டி. (C1936)

பூரண விளைதிறனுடைய பம்பாய் வெங்காய விதை விற்பனைக்குண்டு. பிள்ளையார் மெற்றல் வேக்ஸ், 257, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். [C-1837]

வெளிநாடு செல்லும் என்ஜினியரின் குளிர்சாதனப் பெட்டி, அலுமாரி, கட்டில்கள், Vono Spring Beds, Dressing Table, எழுது மேசைகள், Show Case, சாப்பாட்டு மேசைகள், ஹோல் செற்றி, தேக்கு தளபாடங்கள், pyrex Dinner Set, Cut glass, சில்வர் பாத்திரங்கள், கசற் றேடியோ, Iron, கம்பளங்கள் உடன் விற்பனைக்குண்டு பத்மநாதன், ஆடியபாதம் றோட், திருநெல்வேலிச் சந்திக்கும் மருத்துவக் கல்லூரிக்குமிடையில். [C-1953]

கோப்பாய் வடக்கு இராச பாதைக்கு ½ மைல் தூரத்தில் 3 பரப்புக்காணி வீட்டுடன் விற்பனைக்குண்டு. விரும்பியோர் கீழ்கண்ட விலாசத்துடன் தபால்மூலம் தொடர்பு கொள்ளவும். நா. இரத்தினம், சாந்தி றேடஸ், கோப்பாய் சந்தி, கோப்பாய். [C-1958]

திருநெல்வேலி தெற்கில் யாழ். வளாகத்திற்கு அண்மையில் உன்னதமான சூழலில் 2¾ பரப்புக்காணியில் சகல வசதி கொண்ட வீடு விற்பனைக்கு உண்டு. நேரில் தொடர்பு கொள்ளவும். எஸ். தெட்சணமூர்த்தி, Bata Fancy Emporium, 78, கஸ்தூரியார் றோட்டு, யாழ்ப்பாணம். (C 1930)

## வகுப்புகள்

108, Brown Road, Jaffna, A/L 88 இரசாயனம் ஆசிரியர் - சத்தீஸ். ஆரம்பம்: 25-04-86 வெள்ளி 4-30 P.M. அடுத்த பிரிவு ஆரம்பம்: 26-04-86 சனி 2-15 P.M. விபரங்கள் நேரில். [C-1954]

ரேடியோ அன் ரீவி, வெல்டிங், பிளம்பிங் (நீர்க்குழாய் பொருத்துதல்), மோட்டார் மெக்கானிசம், தட்டெழுத்து, சுருக்கெழுத்து புதிய வகுப்புகள் குறைந்த கட்டணத்துடன் 25-4-86, 26-4-86இல் ஆரம்பமாகின்றன. சான்றிதழ் பெறுமதியானது. Vispa Engineering, 328, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (C 1895)

பௌதிகவியல் (88) புதிய வகுப்பு, ஆசிரியர்: N. பத்மநாதன் B. Sc.(Hons) ''அளவீடுகள்'', சனி-ஞாயிறு 7-30 a. m. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப் படுகின்றன. நாகலிங்கம் இன்ஸ்ரிரியூட், நாவலடி லேன், திருநெல்வேலி. Note: மே 24 முதல் ஒளியியல். (C 1905)

## காணவில்லை

யாழ்ப்பாணம் சாட்டி வீதியில் 1 Sri 2669 இலக்க முடைய கார் தகடு தவற விடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் யாழ்ப்பாணம் தொழில்நுட்பநிறுவனம், வங்களாவடி, வேலணை என்ற விலாசத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (C 1970)

## தேவை

புளியங்கூடல் சந்திக்கு அருகாமையில் உள்ள மஞ்சு கிரைண்டிங் மில்லிற்கு திறமான மில் டிறைவர் தேவை. தொடர்பு கொள்ள வேண்டிய இடம் ராணி ஸ்ரோஸ், வங்களாவடிச் சந்தி, வேலணை. (C1946)

யாழ் நகரில் உள்ள பிரபல வியாபார நிறுவனத்திற்கு விற்பனை அனுபவமுள்ள, விற்பனை லிகிதர் (Counter Clerk) தேவை. ஆங்கிலம் எழுத வாசிக்க தெரிந்தவராகஇருக்க வேண்டும். இதற்கு முன் வேலை செய்த அனுபவத்துடன் வயது 30 - 40க்குக் இடைப்பட்டவர்களிடமிருந்துவிண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்ப முடிவு திகதி 30-4-86 விளம்பர இல: A612 மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். (A612)

க. பொ. த. உயர்தரம் சித்தியடைந்த, முன் அனுபவம் உள்ள பெண் தட்டெழுத்தாளர்/லிகிதர்-பிரபல வியாபார ஸ்தாபனத்திற்கு தேவை. முன்அனுபவத்துடன் விண்ணப்பிக்கவும். யாழ். நகரிலிருந்து ஐந்து மைல் சுற்றுடலில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். விண்ணப்ப முடிவு திகதி 30-4-86. விண்ணப்பிக்கவும் விளம்பர இல: A611, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். [A611]

முதலாவது
### பிறந்தநாள் வாழ்த்து

**செல்வி**
**ஜீவ சரண்யா**

மாவிட்டபுரம், தலையிட்டி, ஞானவைரவர் கோவிலைச் சேர்ந்த ஜீவநாதக் குருக்கள். சந்திரா தம்பதிகளின் அன்புப் புதல்வி ஜீவ சரண்யா இன்று தனது முதலாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார். இவரை அப்பா, அம்மா, ராகினி அக்கா, யாழினி அக்கா, சௌமியா அக்கா, அப்பம்மா, தாத்தா, அம்மம்மா, மாமாமார், மனோ அத்தை குடும்பத்தினர், ஜனனி மச்சாள், ஜகர்னி மச்சாள், நித்தியாச் சித்தி, சித்தப்பா, குப்பிளான் குமாரு மாமா குடும்பத்தினர், சுதுமலை மகேஸ்வரத் தாத்தா குடும்பத்தினர், கச்சேரி ஸ்ரீபதி மாமா குடும்பத்தினர், பபா அக்கா, செல்வி அன்ரி ஆகியோர் சகல சிறப்பும் பெற்று நீடூழி வாழ்க என வாழ்த்துகின்றார்கள். [C-1942]

## பயிற்சி

Computer Programming (COBOL), ரேடியோ, வீடியோ டெக், ரெலிவிஷன் றிப்பியறிங், எலக்றிக்கல் வயறிங், வைண்டிங் ஆகிய தொழிற்பயிற்சிகள் ஆரம்பமாகவுள்ளன. பயிற்சிகள் ஆரம்பம்: 26-04-86 காலை 9-30 மணி. விபரங்கட்கு JAFFNA TECHNICAL INSTITUTE, 52/1, StanleyRoad, (றெயில்வே கடவைக்கு அருகாமையில்) யாழ்ப்பாணம். (C 1971)

## சேவை

தட்டச்சு இயந்திரம் சிறந்த முறையில் திருத்திக் கொடுக்கப்படும். தொடர்பு. Fudo Enter prises, 39/17, மின்சார நிலைய வீதி, [3-ம் ஒழுங்கை] யாழ்ப்பாணம். [C-1961]

### மின்தடைபற்றிய அறிவித்தல்

1986-ம் ஆண்டு சித்திரை மாதம் 27-04-86 ஞாயிற்றுக்கிழமை காலை 8-00 மணிமுதல் மாலை 16/30 மணிவரை (4½) அவசர திருத்த நிர்மாண வேலைகளுக்காக முல்லைத்தீவு, ஆனையிறவு, பரந்தன், கிளிநொச்சி, மாங்குளம், நெடுங்கேணி ஆகிய பகுதிகளுக்குரிய மின் விநியோகம் தடைப்படும் என்பதை அறியத்தருகின்றேன். இதனால் பொதுமக்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களுக்காக வருந்துகின்றேன்.

நன்றி

**மின்பொறியியலாளர்,**
கிளிநொச்சிப் பிரதேசம்,
மாங்குளம்.
(A 617)

முதலாவது
### பிறந்ததின வாழ்த்து



**செல்வி**
**சிவரூபி**

மட்டுவில் வடக்கு, பொற்கொல்லர் வீதியில் வசிக்கும் நந்தகோபால் - யோகலட்சுமி தம்பதிகளின் செல்வப் புதல்வி செல்வி சிவரூபி இன்று தனது முதலாவது பிறந்த தினத்தைக் கொண்டாடுகின்றார். இவரை அம்மா, அப்பா, அப்பம்மா, அம்மம்மா, அம்மப்பா, சித்திமார், மாமிமார், மாமாமார், மச்சாள்மார், மச்சான்மார், பெரியப்பாமார், பெரியம்மாமார், மற்றும் உற்றார், உறவினர் அனைவரும் சகல கலைகளும் கற்று சீரோடும், சிறப்போடும் பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றார்கள். [C-1947]

## ''காயங்களுடன் சிறுவன் கிடந்தார்'' சாரதி சாட்சியம்

(யாழ்ப்பாணம்)

சம்பவதினம் மாங்குளத்தில் நெல் கட்டுவதற்காகக் கோப்பாய் ஊடாக கைதடி சென்ற போது சுமார் 30 யார் தூரத்தில் சைக்கிளில் வந்த சிறுவன் லொறியைக் கடந்து சென்ற போது பலத்த சத்தம் கேட்டது லொறியை நிறுத்தி விட்டுப் பார்த்த போது அச் சிறுவன் காயத்துடன் கிடந்தான்.

கைதடியில் லொறி விபத்தில் பலியான வ ஞானசேகர சர்மாவின் (13 வயது) மரண விசாரணையில் சாட்சியமளித்த லொறிச் சாரதியான கரவெட்டியைச் சேர்ந்த து. துரைரத்தினம் இவ்வாறு கூறினார்.

யாழ். பதில் நீதவான் ஏ. அன்ரனி மரண விசாரணை நடத்தினார்.

லொறிச் சாரதி சாட்சியமளிக்கையில் சம்பவம் நடந்த போது அவ்விடத்தில் சிறுவனின் உறவினர் எவரும் இருக்கவில்லை என்றும்காயமடைந்த சிறுவனை ஆஸ்பத்திரியில் அனுமதித்த போது அவர் இறந்து விட்டார் என்றும் கூறினார்.

லொறியுடன் சாரதியை யாழ். நீதவான் முன்னிலையில் ஆஜர் செய்யுமாறு பணித்து விசாரணையை ஒத்தி வைத்தார். (க)

## வீட்டுக்காரரை கத்தியால் குத்திவிட்டு கொள்ளை

[வேலணை]

வேலணை கிழக்குப் பகுதியைச் சேர்ந்த முத்துவேலு இராசரெத்தினம் [வயது 50] என்பவரது வீட்டுக்குள்புகுந்த திருடர் கோஷ்டியொன்று வீட்டுக்காரரின் தலையைக் கத்தியால் வெட்டியதுடன், அவரது நெஞ்சையும் கடுமையாகத் தாக்கிவிட்டு வீட்டில் இருந்த ரொக்கப்பணம், உடுப்புகள் மற்றும் பொருள்களையும் கொள்ளையடித்துக்கொண்டு சென்றுள்ளனர்.

இச்சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை நள்ளிரவு இடம் பெற்றது.

இந்த கொள்ளைக்கோஷ்டியினர் அருகாமையில் இருந்த வீடொன்றிற்குள் புகுந்த சமயம் தற்செயலாக அந்த வீட்டில் இருந்த ஒருவரின் முயற்சியினால் அந்த வீட்டில்கொள்ளையிடமுடியவில்லை. அந்த வீட்டில் பெண்கள்தான் தனிமையில் இருந்துவந்தார்கள் எனத் தெரியவருகிறது.

தலையில் காயப்பட்ட நபர் உடனடியாக வேலணை அரசினர் மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டு சிகிச்சை பெற்றுவருகின்றார்,

### விசாரணையின் பின் விடுதலை

[வவனியா]

வவனியர் அரசினர் ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்த நாம்பன் குளத்தினைச் சேர்ந்த சி. கருணாநிதி பொலிஸ் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டு பின் விடுவிக்கப்பட்டுள்ளார்.

இவேளை பண்டாரிக்குளத்தினைச் சேர்ந்த விசுவநாதன் என்ற நபரும் ஆஸ்பத்திரியில் தங்கி இருந்து சிகிச்சை பெற்று வந்த போது திடீரெனக்காணாமற் போய்விட்டதாக ஆஸ்பத்திரி வட்டாரங்கள் புகார் செய்துள்ளன.

### வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

முதலாம் வருட
### நினைவஞ்சலி



**இராசையா**
**பரமேஸ்வரன்**

(முன்னாள் சொர்ணலட்சுமி தென்னந்தோட்ட உரிமையாளர், பளை.)

மலர்வு: 26-03-1922

உதிர்வு: 06-05-1985

மரணம் தவிர்க்க முடியாது என்பதை மனது புரிந்துகொள்கிறது. இருந்தாலும் நீங்கள் இல்லாத வெற்றிடத்தை நிரப்ப இயலாமல் எங்கள் இதயங்கள் ஏங்குகின்றனவே!

ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:
மனைவி, பிள்ளைகள், சகோதரி, மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

''கௌரி வாசா'',
பொன்னாலை,
சுளிபுரம்.
[C-1956]

## நன்றி கூறுகின்றோம்

மாவிட்டபுரம், தெல்லிப்பழையைச் சேர்ந்த வை. ஜீவநாதக்குருக்கள் ஆகிய நான் என்னால் கடந்த இரு மாதங்களுக்கு முன்னர் யாழ்/ஸ்ரான்லிவீதியில் தவறவிடப்பட்ட எனது அடையாள அட்டை, சாரதி அனுமதிப்பத்திரம், ரொக்கம் ரூபா 700/- ஆகியவற்றைக் கொண்ட கைப்பையைக் கண்டெடுத்து பொது நலசேவை மனப்பான்மையுடன் என்னிடம் திரும்ப ஒப்படைத்த கட்டைவேலி — நெல்லியடி ப. நோ. கூ. சங்க லொறிச்சாரதிகள் க. ஜெயக்குமார், எஸ். அந்தோனிப்பிள்ளை ஆகிய இருவருக்கும் மேற்படி ஸ்தாபனமாகியகட்டைவேலி—நெல்லியடி ப. நோ. கூ. சங்கத்திற்கும் எனது மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இப்படிக்கு
**வை. ஜீவநாதக்குருக்கள்,**
தலையிட்டி வைரவர் கோவில்,
மாவிட்டபுரம், தெல்லிப்பழை.
(C 1941)

# லிபியா மீதான அமெரிக்கப் பகைமை தொடர்ந்து உக்கிரம்

வாஷிங்டன், ஏப் 24.

**லிபியாமீதான அமெரிக்காவின் பகைமை தொடர்ந்தும் உக்கிரமாகவே இருப்பது தெளிவாகியுள்ளது. லிபியாவின் பயங்கரவாதத்துக்கெதிராக அமெரிக்கா தொடர்ந்து தாக்குதலை நடத்தும் என்று அமெரிக்க அதிபர் திரு. ரீகன் மீண்டும் நேற்று வலியுறுத்திக் கூறினர்.**

திரு. ரீகன் டோக்கியோவில் இடம்பெறவுள்ள கைத்தொழில் நாடுகளின் உச்சி மாநாட்டில் பங்குபற்றுவதுடன், ஆசிய நாடுகள் சிலவற்றுக்குத் தமதுஉத்தியோகபூர்வ பயணத்தை ஆரம்பித்துள்ளார்.

இப்பயணத்தின் முன்னர் அவர் உரையாற்றியபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

## உலகச் செய்திகள்

திரு. ரீகன் மேலும் கூறியதாவது:

''உலகிலுள்ள எந்த ஒரு அமெரிக்கனையும் கொல்வதற்கு நான் அனுமதிக்கமாட்டேன். சமாதான வழிசளிலேயே தீர்வுகளை எட்ட அமெரிக்கா விரும்புகிறது. ஆனல் லிபியா போன்ற பயங்கரவாத நாடுகளின் போக்கை அமெரிக்கா ஒருபோதும் அனுமதிக்கமாட்டாது. லிபியா அமெரிக்காமீது பயங்கரவாதச் செயல்களைத் தொடர்ந்து புரியுமாஞல், அதன்மீது மீண்டும் தாக்குதலை நடத்த அமெரிக்கா பின்நிற்கமாட்டாது.

அரபு நாடுகள் லிபியாவின் போக்குச்கும், சர்வதேசப் பயங்கரவாதத்திற்குமெதிராக ஒன்றிணைந்து செயற்பட வேண்டும். இல்லையேல் சர்வதேசரீதியிலான புரிந்துணர்வு, வர்த்தக உறவுகள் ராஜதந்திரத் தொடர்புகள் என்பன பாழாகிவிடும்.

நாகரிகமான மக்களால் பயங்கரவாதத்தை தொடர்ந்து சகித்துக்கொள்ள முடியாது'' என்று ரீகன் குறிப்பிட்டார். (கி)

# "கல்லூரிகள் மீதான தாக்குதல்களைநிறுத்துங்கள்"

## கல்வி அமைச்சருக்கு மகஜர்

(யாழ்ப்பாணம்)

''இலங்கை விமானப் படையின் ஹெலி கொப்டர் தாக்குதல்களால் யா/யூனியன் கல்லூரியின் கட்டிடங்கள் பலத்த சேதத்துக்குள்ளாகியுள்ளன. இப்போது பாடசாலை விடுமுறை காலமாதலால் பல உயிரிழப்புக்கள் தவிர்க்கப்பட்டுள்ளன. இது போன்ற தேவையற்ற தாக்குதல்களை உடன் நிறுத்த நடவடிக்கை எடுங்கள் சேதமடைந்த கட்டிடத்துக்கு நஷ்ட ஈடு வழங்குங்கள்.''

இவ்வாறு யா/ யூனியன் கல்லூரியின் பழையமாணவர் சங்கம் கல்வி அமைச்சுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது

இக் கடிதத்தின் பிரதிகள் யாழ் கல்விப் பணிப்பாளருக்கும் யாழ். அரசாங்க அதிபருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (ஐ)

## மதுரை தேரோட்டம்

[மதுரை]

மதுரை மீனுட்சியம்மன் தேரோட்டம் நேற்றுமுன் தினம் வெகுசிறப்பாக இடம் பெற்றது,

மீனுட சியம்மன் தேவஸ்தான நான்குவீதிகளிலும் ஆயிரக் கணக்கான பக்தர்கள் திரண்டு நின்று தேர்வடம் பிடித்தனர். [கி]

## அரிசி ஆலேயில் கொள்ளை

(வவனியா)

வவனியா வேப்பங்குளத்தில் உள்ள ஒரு அரிசி ஆலைக்குள் புகுந்த இனம் தெரியாத சிலர் 2500 ரூபா ரொக்கப் பணத்தினையும் இரண்டு துவிச்சக்கர வண்டிகளையும் அபகரித்துக் கொண்டு சென்றுள்ளார்கள்.

ஆலை அலுவலக பொருள்கள் சில கொள்ளையிடவந்தவர்களினல் சேதப்படுத்தப்பட்டதாகவும் கூறப்பட்டது.

ஆபிரிக்கப்பட்டிணி

# சர்வதேச நிதி வசூல் கிரிக்கெட் போட்டி

லண்டன், ஏப் 24

ஆபிரிக்கப் பட்டிணிக்கு நிதி சேகரிக்கும் வகையில் மாபெரும் கிரிக்கெட் போட்டியொன்றுஇடம் பெறவுள்ளது. இப் போட்டியில் பிரபல சர்வதேச ஆட்டக்காரர்கள் பங்கு பற்றுகின்றனர்.

அடுத்த மாதம் 20 ந் தேதி இக் கிரிக்கெட் பந்தயப் போட்டி பேர்மிங்ஹாம் எட்பாஸ்டனில் இடம் பெறும்

மேற்கிந்திய அணிக்கு எதிராக உலக அணி இந்தப் போட்டியில் பங்கு கொள்ளும். உலக அணியில் இந்திய ஆட்டக்காரர்களான கபில்தேவ், சுனில் கவாஸ்கர், ரவிசாஸ்திரி உட்பட பாகிஸ்தான் வீரர் இம்ரான்கான், இங்கிலாந்து வீரர்கள் டேவிட்காவர், இயன் போத்தம், ஆஸி வீரர் கிரேக் மத்தியு ஆகியோர் கலந்து கொள்வார்கள்.

முன்னுள் மேற்கிந்திய கிரிக்கெட் அணி காப்டன் கிளைவ் லொயிடும் இந்த ஆட்டத்தில் பங்கு பற்றுவது குறிப்பிடத் தக்க அம்சமாகும். (கி)

# ஜெயகாந்தனுக்கு 'ராஜராஜன்' விருது

சென்னை, ஏப் 24,

பிரபல தமிழ் எழுத்தாளர் திரு. ஜெயகாந்தனுக்கு தஞ்சைத் தமிழ் பல்கலைக்கழகம் 'ராஜராஜன்' என்ற உயர் விருது வழங்கிக் கௌரவித்துளளது.

ஜெயகாந்தனின் 'சுந்தர காண்டம்' என்ற வெளியீட்டுக்கே இந்த விருது வழங்கப் பட்டுள்ளது. ஒருலட்சத்து ஒரு ரூபாவை இந்த விருது கொண்டுள்ளது.

இந்த விருதைப் பெறும் இரண்டாவது நபர் ஜெயகாந்தன் ஆவார். இதற்குமுன்னர் அறிஞர் சுத்தானந்த பாரதி 1984ல் இந்த 'ராஜராஜன்' விருதைப் பெற்றுக்கொண்டார்.

53 வயதான எழுத்தாளர் ஜெயகாந்தன் 37 நாவல்களையும், 147 சிறுகதைகளையும் படைத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (கி)

## கிரிக்கெட் வீரர் ஜிம்லேக்கர் காலமானுர்!

லண்டன், ஏப் 24

ஒரே இன்னிங்ஸில் 10 விக்கட்டுகளைக் கைப்பற்றிய முன்னுள் இங்கிலாந்து கிரிக்கெட் வீரர் ஜிம் லேககர் காலமானுர்.

64 வயதான இந்த முன்னுள் ஆட்டக்காரர் லண்டனிலுள்ள மருத்துவ மனையொன்றில் நேற்றுக்காலமானுர்.

1956 ம் ஆண்டு ஆஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் 90ஓட்டங்களைக் கொடுத்து 19 விக்கெட்டுக்களை ஜிம்லேக்கர் கைப்பற்றியிருநதார் ஜிம்லேக்கர் ஒரு சுழல் பந்து வீச்சாளராவார். (கி)

## தஞ்சை தமிழ் பல்கலைக்கழக நூல் வெளியீடு!

சென்னை ஏப் 24,

தஞ்சாவூர்த் தமிழ்ப் பல்கலைக்கழகம், சங்க இலக்கியம் பற்றி மூன்று தொகுதிகளையும், மனித இயல் பற்றிய 14 தொகுதிகள் கொண்ட கலைக்களஞ்சியத்தையும் வெளியிட்டுள்ளது.

இந்த நூல்களை தமிழக நிதியமைச்சர் திரு. நெடுஞ்செழியன் கடந்த செவ்வாய்க்கிழமையன்று வெளியிட்டு வைத்தார்

இதேவேளை அறிவியல் நூல்களையும் தமிழில் வெளியிடும் பணிகளை தஞ்சாவூர்த் தமிழ்ப் பல்கலைக் கழகம்மேற்கொண்டு வருகிறது. இந்த நூல்கள் விஞ்ஞானம், தொழில் நுட்பம் ஆகியவைகள் பற்றியதாக வெளிவரும்.

தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் செயல்ப்பாட்டுக்கென தமிழக அரசு, இந்த ஆண்டு சுமார் 90 லட்சம் ரூபாவை ஒதுக்கியுள்ளதென்பதும் குறிப்பிடத்தக்கது. (கி)

பவர்ஸ் உரம்

ஒப்பற்றது

ரூபா 2,000/- க்கும் மேல்

ஏ.பவர் அன்ட் கம்பனி லிமிட்டெட்
5, மேல் சத்தம்ஸ் வீதி,
கொழும்பு-1.

MASTERS ABC 6/85 (b)

## மணி வாக்கு

எற்றென்றிரங்குவ செய்யற்க செய்வானேல்
மற்றன்ன செய்யாமை நன்று.

— குறள்

# நமது நோக்கு

## வழிபாட்டிடங்களுக்கருகில் முகாம்களை நிறுவாதீர்!

வழிபாட்டு தலங்கள் இருக்கும் இடங்களுக்கருகாமையில் இராணுவ முகாம் இருக்காத முறையில் ஒரு நடைமுறையைச் செயல்படுத்தும்படி இந்துக்கோயில்களதும் இந்து ஸ்தாபனங்களதும் பாதுகாப்புக்கான அமைப்பு அரசாங்கத்தைக் கேட்டுள்ளது.

தொண்டமனாறு செல்வச் சந்நிதிக் கோயிலுக்கும் அதன் சுற்றாடலுக்கும் நிகழ்ந்துள்ள அநியாயங்களை மட்டுமல்ல வடக்குக் கிழக்கின் பல பாகங்களிலும் வணக்க ஸ்தலங்களுக்கு விளைவிக்கப்பட்டுள்ள சேதங்களையும் அவமதிப்புக்களையும் கருத்தில் கொண்டே இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது என்பது தெளிவு

இந்த நாட்டில் என்று இன வெறியும், சமயப் பூசல்களும் கிளறிவிடப்பட்டனவோ அன்றிலிருந்தே வணக்க ஸ்தலங்கள் அவமதிக்கப்படுவதும் நிகழ்ந்து வருகின்றன.

இனக்கலவரங்களின் போது ஒரு பகுதியின் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த வன்முறையாளர்கள் அப் பகுதியின் சிறுபான்மையினரின் வணக்க ஸ்தலங்களை அவமதிப்பதும், அழித்து நாசமாக்குவதும் பொதுவான நிகழ்வுகளே இருந்தபோதிலும் இந்த நாட்டில் தமிழ் மக்களின் வணக்க ஸ்தலங்கள் பாதிக்கப்பட்டுள்ள அளவுக்கு சிங்கள மக்களின் வணக்க ஸ்தலங்கள் பாதிக்கப்பட்டிருப்பதாகக் கூறி விடமுடியாது.

வடக்குக் கிழக்கில் பௌத்த ஆலயங்கள் ஆயுதப் படையினரால் பாதுகாக்கப்படுமளவுக்கு தமிழ் மக்களின் வழிபாட்டு ஸ்தலங்களைப் பாதுகாப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்படவில்லை. அதற்குப் பதிலாக அந்த ஸ்தலங்களே நாச வேலைகளுக்குப் பெரிதும் உள்ளாகி வந்துள்ளன.

பௌத்த ஆலயங்களைப் பாதுகாப்பதற்கு அரசு எடுக்கும் நடவடிக்கைகளைப் பற்றி யாரும் குறைபடமாட்டார். ஆனால் அதே பாதுகாப்பை ஏனையவர்களின் வணக்கத் தலங்களுக்கும் வழங்க முன் வராதது ஏன் என்பதே கேள்வி.

வடக்குக் கிழக்கில் சரித்திர பிரசித்திபெற்ற இந்து ஆலயங்கள் பல ஆயுதப் படைகளினால் அட்டூழியங்களுக்குள்ளாகின்றன. தமிழ்ப் போராளிகளுக்கும் ஆயுதப்படையினருக்குமிடையில் இடம்பெறும் மோதல்களின் போது ராணுவ முகாம்களுக்கருகில் உள்ள இந்துக்கோயில்கள் நாசமாக்கப்பட்டு விடுகின்றன. சமீப காலத்தில் நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலயமும் தொண்டமனாறு செல்வசந்நிதி ஆலயமும் இவ்வாறு சேதத்துக்குள்ளாகியுள்ளன.

ராணுவ முகாம்களைத் தாக்குவதற்கு ஆலயக் கட்டிடங்களை தீவிரவாதிகள் பயன்படுத்துகிறார்கள் எனக்குற்றஞ் சாட்டப்படுகின்றன. அவ்வாறாயின் ஆலயக் கட்டிடங்களுக்கருகில் ராணுவ முகாம்களை ஏன் அமைக்கவேண்டும்? சாதாரண மக்களின்சொத்துக்கள், கட்டிடங்கள், வீடுகளையெல்லாம் ராணுவ முகாம்களை விஸ்தரிப்பதற்காகத் தகர்த்து விடும் அரசாங்கம், தமிழ் மக்களின் சமய உணர்ச்சியைப் புண்படுத்தும்விதத்தில் ஆலயங்களை அவமதிப்பது நியாயமா?

ஆலய மணிகளை வீழ்த்துவது, கோயில் தேர்களை எரிப்பது, மடங்களை நாசமாக்குவது போன்ற செயல்கள் நாகரிகமானவையல்ல.

கோயில்களிலும் ஏனைய வழிபாட்டிடங்களிலும் சாதாரணப் பொதுமக்கள் கூடுகிறார்கள். இந்த மக்களின், நெறி, கலை, கலாசாரம் போன்ற சமுதாயப் பாரம்பரியங்கள் யாவும் கோயில்களிலும், வணக்ஸ்தலங்களிலிருந்துமே உருவாகின்றன, வளர்க்கப் படுகின்றன. சமயப் பற்றுள்ளஒருமனிதன் தான்பரம்பரையாக வணங்கி வரும் ஸ்தலத்தைத் தன் உயிரினும் மேலாக நேசிக்கிறான். அந்த இடத்தை மாசுபடுத்துபவர்களை அவன் மனம் ஒரு போதும் மன்னிக்க சம்மதியாது.

இன்றைய இக்கட்டான நிலையிலும்கூட மக்கள் வழிபாட்டுஸ்தலங்களில் கூடி மனமுருகி பிரார்த்தனைகளில் ஈடுபடுவதெல்லாம் வெறும் சம்பிரதாயம்என்று மட்டும் நினைத்துவிடலாகாது. அது அவனது உயிரிலும், ஊனிலும் ஊறி விட்டமரபு. எனவேதான் வழிபாட்டு ஸ்தலங்கள் புனிதஸ்தாபனங்கள், போன்றவற்றுக்கருகாமையில் ஆயுதப்படைகளின் முகாம்களை நிறுவவேண்டாம் எனக் கோருகின்றனர். இதற்கு அரசு செவிசாய்க்க வேண்டும்.

## ரெலா எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலை இராணுவத்தின் [ரெலா] பெயரைக் களங்கப்படுத்துவதற்காக சில பிற்போக்கு சக்திகள் தமது பெயரைப்பயன்படுத்தி கொள்ளைகள் ஆள்க்கடத்தல்கள் வாகனக்கடத்தல்களில் ஈடுபட்டு வருவதாக மேற்படி இயக்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

தமது பெயரைபயன்படுத்தி குற்றம் புரிபவர்களுக்கு கடும் தண்டனை வழங்கப் படுமென்றும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

# இலங்கையின் விமானத் தாக்குதல்கள்; இந்தியா முன்னமே அறிந்திருந்தது

## இந்தியசஞ்சிகை கூறுகிறது

:"கடந்த பெப்ரவரி மாதம் இலங்கையின்தமிழ்ப் பகுதிகள்மீது இலங்கைப் பாதுகாப்புப்படைகள் மேற்கொண்ட முதலாவது விமானக் குண்டுவீச்சுத் தாக்குதல் பற்றி இந்தியப் புலனாய்வுத்துறைஅமைப்புக்கள் முன்னமேயே தெரிந்திருந்தன. இவ்வாறான நடவடிக்கையை மேற்கொள்ளவேண்டாமென இலங்கை அரசாங்கத்தை இந்திய அரசு எச்சரித்திருந்தது. ஆயினும் இந்த எச்சரிக்கை செவிடன் காதில் ஊதிய சங்காகவே இருந்தது."

இவ்வாறு கூறுகிறது பிரபல இந்திய சஞ்சிகையான 'சண்டே'. இச்சஞ்சிகையின் சென்னை நிருபர் அனிதா பிரதாப் எழுதியுள்ள இக் கட்டுரையில் இக்கருத்து வெளியிடப்பட்டுள்ளது அக் கட்டுரையின் சில பகுதிகள் இங்கு தரப்படுகின்றன.

"இந்த முதலாவது விமானத் தாக்குதல் பெப்ரவரி மாதம் 19-ம் திகதி இடம் பெற்றது. சுமார் 10 பேர் வரை இதில் கொல்லப்பட்டனர். 26ம் திகதி இந்திய வெளியுறவமைச்சர் திரு.பகத் பாராளுமன்றத்தில் இலங்கைப் பாதுகாப்புப் படைகளின் செயல்கள் நாரீக உலகின் செயல்களிற்கு அப்பாற்பட்டவையாக இருப்பதுடன் ஒரு இனப்படுகொலையின் குணம்சங்களைக் கொண்டிருக்கின்றன எனக் கூறினார்.

ஆயினும் அமைச்சரின் இந்த உரை இலங்கைத் தரப்பிடம் எவ்விதப் பொறுமையையும் உருவாக்கவில்லை. மாறாக அடுத்த நாளே யாழ்ப்பாணக் கிராமங்கள்மீது இன்னொரு குண்டுவீச்சுத் தாக்குதல் நடத்தின. அதன் பின்னர் மார்ச் மாதம் 12ம் திகதி மீண்டும் ஒரு குண்டுவீச்சுத் தாக்குதல் வல்வெட்டித்துறையில் நடந்தது. இந்த விமானங்கள் சிம்பாப்வேயைச் சேர்ந்த கூலிப் படையினரால் ஓட்டப்படுவதாகக் கூறப்படுகிறது.

இத்தாக்குதல்பற்றி 'புரொடெக்' இயக்கத்தின் தலைவர் திரு. சந்திரஹாசன் பின்வருமாறு கூறுகிறார். "49ம் ஆண்டில் ஜெனீவா மாநாட்டின் ஒரு தீர்மானம், ஒரு யுத்த காலத்தில் சம்பந்தப்பட்டவர்கள், பொதுமக்களுக்கும் ஆயுதம் தரித்தவர்களுக்குமிடையில் வேறுபாடு காட்டவேண்டுமென்றும், தாக்குதல்கள் ராணுவஇலக்குகள்மீதே மேற்கொள்ளப்படவேண்டுமெனவும் கூறுகிறது" என்று.

இலங்கை அரசின் இந்தத் தாக்குதல்கள், இலங்கை ஜனாதிபதி ஜயவர்த்தனா தான் கூறிவருவதற்கு மாறாக இலங்கை இனப்பிரச்னைக்கு ஒரு ராணுவத் தீர்வொன்றையே காணமுயல்வதாகத் தெளிவுபடுத்துகிறது. அவரின் இந்தமுடிவு அவர் இப்பிரச்னையை நோக்கும் விதத்திலேயே செய்யப்பட்டது. அதாவது இது ஒரு இனப்பிரச்னையோ அன்றி, ஒரு சமுதாயம் தனது அடிப்படை உரிமைகளுக்காக நடத்தும் போராட்டமாகவோ அவர் இதனைக் கருதவில்லை. ஆனால் இது ஒரு சிறு குழுப் பயங்கரவாதமாகவே இதனை அவர் கருதுகிறார். இந்தப்பிழையான நோக்கினை அவர் மாற்றிக் கொள்ளாதவரையும் இவ்வகையான அடக்குமுறை மிகுந்த நடவடிக்கைகளையே மேற்கொள்ளுவார்.

### இந்தியாவின் கடமை

இலங்கை அரசின் இந்த இனப்படுகொலை நடவடிககைகளுக்கு எதிரான உலக அபிப்பிராயத்தை இந்தியா ஒன்று திரட்ட வேண்டிய நேரம் வந்துவிட்டது. இதுவரை காலமும் இலங்கையில் தமிழ்பேசும் மக்களுக்கெதிரான அரச பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு இந்தியா சாதித்துவந்த மௌனம் புரிந்து கொள்ளக்கூடியதே. கடந்தகால நிகழ்வுகள் இலங்கை விடயத்தில் இந்தியா மிகுந்த பொறுமையைக்கடைப்பிடித்து வந்துள்ளதென்பது தெளிவு, அதுமட்டுமல்ல இப்பிரச்னையைச் சுமுகமானமுறையில் தீர்த்துவைக்கவேண்டிய சூழ்நிலைகளை ராஜீவ் உருவாக்கிக் கொடுத்ததுடன், வேண்டிய கால அவகாசமும்கொடுத்தார். ஆயினும் இலங்கை அரசும் இந்தியாவின் இந்த நல்லெண்ண முயற்சிகளை உதாசீனப்படுத்தியது மட்டுமல்ல, தனது சொந்த மக்கள் மீதே குண்டுவீச்சுத் தாக்குதல்களையும் மேற்கொள்ள ஆரம்பித்து விட்டது.

### இந்தியா பெருமையை இழக்கும்

தமிழ்ப் பெண்களும், சிறு குழந்தைகளும் தங்கள் படுக்கைகளிலேயே கொல்லப்படும் இந்நேரத்தில் இந்தியா இது விடயத்தில் மௌனமாகஇருக்குமேயானால் மனித உரிமைகளுக்காகக் குரல் கொடுக்கும் நாடு என்ற பெருமையை இந்தியா இழந்துவிடும்.

இலங்கையின் இந்த விமானத் தாக்குதல்கள், இலங்கை ராணுவம் தமிழ்த் தீவிரவாதிகளைத் தரையில் எதிர்த்துப் போராடமுடியாத நிலையில் உள்ளன என்பதையே எடுத்துக்காட்டுகின்றன.

### தமிழ் மக்களின் நிலை

தமிழ்த்தீவிரவாதிகள், தமிழ்ப் பொதுமக்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளனரென்பதை இலங்கை அரசாங்கம் உணர்ந்துள்ளது இலங்கைப் பாதுகாப்புஅமைச்சின் அறிக்கையொன்று தமிழ் மக்கள் தீவிரவாதிகளின் நடவடிக்கைகளை அறிந்திருந்தாலும் அவர்களின் இருப்பிடங்களைக் காட்டிக்கொடுக்க இசைகிறார்களில்லை எனக்கூறுகிறது.

### "மீண்டும் பேச்சு வார்த்தையா?',

இலங்கைத் தமிழ்த் தலைவர்கள் இலங்கை அரசு மீண்டும் ஒரு புதிய நகல்திட்டத்தைத் தயாரிக்கிறது என்பதைக் கேட்டவுடன் பெரிதும் அங்கலாய்ப்புறுகின்றனர்.

ஒவ்வொருவருடமும் இந்தக் காலப்பகுதியில் இலங்கை அரசு தான் இபபிரச்னையை அரசியல் ரீதியிலேயே தீர்க்க முயல்வதாகக் காட்டிக்கொள்வதைத் தமிழ்த் தலைவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். இதற்கு இரு காரணங்கள் உண்டு. ஒன்று ஜூன் மாதத்தில் கூடவுள்ள இலங்கைக்கு உதவியளிக்கும் நாடுகளின் கூட்டத்தைச் சமாதானப்படுத்த, இரண்டு தழ்த்தீவிரவாதிகளைமுறியடிக்குமுகமாக இலங்கை பாதுகாப்புப்படையினரை மேலும்பலப்படுத்த வேண்டிய கால அவகாசத்தைப் பெற:

மீண்டும் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கான சந்தர்ப்பங்கள் உண்டா எனக் கேட்டபோது திரு, பாலசிங்கம்கூறுகிறார். "இதற்குரிய ஆலோசனைகளை பெற நாம் இந்தியாவை நோக்குகிறோம். ஆயினும் எமது பிழையை நாங்கள் மீண்டும் செய்யமுடியாது. மீண்டும் பேச்சுவார்த்தைகளுக்கு நாம் இணங்குவோமாயிருந்தால் அது வடக்கு, கிழக்குப் பகுதிகளில் இருந்து ஆயுதப்படையினரை விலக்கிக் கொள்ள வேண்டுமென்ற நிபந்தனையிலேயே இணங்குவோம்" என்று.

ஆனால் இது இலங்கை அரசுக்கு ஏற்புடையதாக இல்லை. இலங்கைத் தேசிய பந்தோபஸ்து அமைச்சர் திரு. அத்துலத்முதலி, "எமதுபிரதேசத்தை விட்டு நாம் விலக வேண்டும் என எப்படி எதிர்பார்க்க முடியும்?" எனக் கேட்கிறார்.

இதனிடையே கடந்த வருடம் செய்துகொள்ளப்பட்ட யுத்தநிறுத்தம் இப்போது அமுலிலில்லைஎன்பதுதெளிவு.

### லோக்சபாவில்

பெப்ரவரி 19ல் லோக்சபாவில் முழு எதிர்கட்சிகளுமே இப்பிரச்னை தொடர்பாக வெளியேற்றம் செய்தது. சென்னையிலுள்ள தமிழ்த்தலைவர்களை சநதோஷமடையச் செய்தது. தமிழ்நாட்டைத் தவிர இந்தியாவின் ஏனைய மாநிலங்கள் இப்பிரச்னையில் கரிசனை கொள்ளவில்லை என்ற இலங்கை அரசின் தப்பபிப்பிராயத்தை இது சிதறடித்தது.

இது ஒரு 'சந்தோஷ அறிகுறி' என வர்ணித்த திரு. அமிர்தலிங்கம், தமிழ் மக்களின் படுகொலையைத் தடுக்க இந்திய அரசு மேற்கொள்ளும் எந்நடவடிக்கையையும் இந்திய மக்கள் ஆதரிப்பர் என்பதை இதுவலியுறுத்துவதாகவும்கூறினர்.

## தமிழர் படுகொலைக்கெதிராக உலக அபிப்பிராயத்தை திரட்டவேண்டும்

### இந்தியா என்ன செய்யும்?

ராஜதந்திர ரீதியில் இலங்கைக்குநெருக்கடியைக் கொடுப்பதில்இந்தியாதோற்றுவிட்டது உண்மையில் கவலைக்குரியது. இலங்கை வெளிப்படையாகவே திமிர் கொண்டுள்ளது தெளிவாகிறது.

இந்தியா, முதலாவதாக, இலங்கைப் பாதுகாப்புப் படைகள் தமது சொந்தக் குடிகளுக்கெதிராக மேற்கொண்டுவரும் வன்முறைகளுக்கெதிராக சர்வதேச கருத்தைத் திரட்ட வேண்டும். இவ் விடயத்தை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன் எழுப்புதல் மாத்திரம் காணாது. இலங்கைக்கெதிராக ஒருதீர்மானம்நிறைவேற்றப்படுவதை இந்தியா பார்த்துக்கொள்ள வேண்டும்.

தென் ஆபிரிக்காவுக்கெதிராக பொருளாதார, ராணுவத் தடைகளை மேற்கொள்ளுமாறு இந்தியா வற்புறுத்தி வருவதைப் போல் இலங்கை விஷயத்திலும் மேற்கொள்ள வேண்டும் என திரு அமிர்தலிங்கம் கூறினார்.

### இனவாத அரசாங்கம்:

அகில இந்திய வானொலியும், தூர்தர்ஷனும் இலங்கையரசை என்று 'இனவாதஅரசு' என வர்ணிக்க ஆரம்பிக்கின்றனவோ [தென் ஆபிரிக்கா இப்படித்தான் இவற்றில் வர்ணிக்கப்படுகிறது] அன்று தமிழர்கள் ஒருபெரும் வெற்றியை ஈட்டுவர்.

### வெளிநாட்டு உதவி

இப்போதுள்ளநிலையில்இலங்கையின் ராணுவப்பிரச்னை ஒரு முட்டுக்கட்டை நிலையை அடையும்- அப்போது ஜனாதிபதி ஜயவர்த்தனா இந்தியாவிடம் அல்லது வேறெங்காவது

[5ம் பக்கம் பார்க்க]

# செல்வா சிராத்த தினம்: அரியாலையில் சிரமதானம்

(யாழ்ப்பாணம்)

தந்தை செல்வாவின் ஒன்பதாவது சிராத்த தினத்தை முன்னிட்டு 26ந் திகதி சனிக்கிழமை அரியாலை மேற்கு வெட்டுக்குளம் ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலயச்சுற்றுடல் சிரமதானப் பணிமூலம் துப்பரவு செய்யப்படும்.

அரியாலை மேற்கு சமாதான சபைத்தலைவர் ஆசிரியர் திரு. சீ வைகுந்தசாமி தலைமையில் நடைபெறும் இச்சிரமதானப் பணியில் அரியாலையில் உள்ள சகல சனசமூக நிலையங்கள், பொது ஸ்தாபனங்கள் யாவும் பங்கு பற்றுகின்றன. சிரமதானப்பணி சனிக்கிழமை காலை முதல் மாலைவரை நடைபெறும் என இச்சிரமதானப்பணி அமைப்பாளரும் ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலயச் செயலாளருமான திரு. செ. கந்தையன் தெரிவிக்கின்றார். (ஐ)

## அஞ்சலிச் சுவரொட்டிகள்

(யாழ்ப்பாணம்)

கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் 25ம் திகதி மரணமடைந்த தமது இருதோழர்களுக்கு ஈ. பி. ஆர். எல். எவ். வின் மக்கள் விடுதலைப்படையின் அஞ்சலிச் சுவரொட்டிகள் யாழ் நகரெங்கும் ஒட்டப்பட்டுளளன.

கந்தர்மடத்தைச் சேர்ந்த ஈசன் (இ. ராஜகாந்தன்), யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த அன்ரன் (ச. சரசகோபால்) ஆகியோருக்காகவே இந்த அஞ்சலி சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

''இவர்கள் விதைத்துச்சென்றதை பத்திரப்படுத்தி பாதுகாப்போம்; இவர்கள் கொட்டிய குருதிக்கு களத்து மேட்டில் கணக்குத் தீர்ப்போம்'' எனும் வாசகங்கள் இச் சுவரொட்டிகளில் காணப்பட்டன.

## இலங்கையின்

(4ம் பக்கத் தொடர்ச்சி)

சீனு அல்லது பாகிஸ்தானாக இருக்கலாம் உதவியை நாடவேண்டிவரும். இதனிடையே அமெரிக்கா இவ் விஷயத்தில் 'தலையிடும்' என்ற ஒரு கட்டுக்கதையும் அடிக்கடி கிளப்பப்பட்டுள்ளது.

அண்மையில் பிலிப்பைன்ஸில் நடந்ததை ஜனாதிபதி ஜெயவர்த்தன பாடமாக கற்றுக்கொள்ள வேண்டும்.

அவசியமேற்படின் 3ம் உலக நாடொன்றில் சர்வாதிகாரியை பதவியிறக்கம் செய்ய அமெரிக்கா தயங்காது என்பதே அந்த பாடமாகும்.


**விற்பனைக்கு**

ஐஸ்கிறீம் பழம் இவை சம்பந்தமான வைகள் தயாரிப்பதற்கான நல்லநிலையிலுள்ள தொழிற்சாலை உபகாணங்கள் உடன்விற்பனைக்குண்டு காலத்திற்கு ஏற்றதொழில் மேலதிக விபரங்களுக்கு தொடர்பு: கொள்ளவேண்டிய முகவரி. ஒட்டோகூல் எஞ்சினியர்ஸ் யாழ்ப்பாணம். (சாந்திதியேட்டர் முன்பாக.) C 1987

**உஷா மினி**
TECHNICIAN
இராணுவத்தினருக்கும் கொரிலாக்களுக்கும் இடையிலான நேரடி மோதல்கள்.
(Strictly for Adults)

**எம்பயர் திரையில்**
ராஜேந்தர் - சங்கீதா
மைதிலி என்னைக்காதலி
**எம்பயர் 'B' சினிமா**
The Deistroyers

**லிடோ Jaffna**
10-30, 2-30, 4-30 6-30
BODY AND SOUL
(Colour)

2வது மாதம்
**வெலிங்டன்**
10-30, 2-30, 6-15
சிவகுமார், மோகன் அம்பிகா, கவுண்டமணி நடித்த
நான் பாடும் பாடல்
(கலர்)


# இன்று 'காந்தம்' வெளியீட்டுவிழா

[யாழ்ப்பாணம்]

மாணவர் இதழ் 'காந்தம்' வெளியீட்டு விழா இன்று வெள்ளி மாலை யாழ் அத்தியடி புதிய வீதியிலுள்ள 'காந்தம்' காரியாலயத்தில், யாழ். இலக்கிய வட்டத்தின் இலங்கை இலக்கியப் பேரவைச் செயலர் திரு. எஸ். சபாரத்தினம் [சசிபாரதி] தலைமையில் நடைபெறவுள்ளது.

'காந்தம்' கடந்த இரு வருடகாலமாகக் கையெழுத்துப் பிரதியாகத் தொடர்ந்து வெளிவந்தது மாணவ உலகம் அறிந்ததே.


சாவகச்சேரி நகராட்சிமன்றம்

**கேள்வி அறிவித்தல்**

சாவகச்சேரிப் பொதுச்சந்தை

15-05-86ந் திகதி தொடக்கம் 31-12-86ந் திகதிவரை சாவகச்சேரிப் பொதுச்சந்தையில் மாத வாடகை அறவிடப்படும் கடைகள், ஊடுகள் ஆகியன தவிர்ந்த ஏனைய நிலவாடகைகளை அறவீடு செய்வதனை குத்தகைக்கு கொடுப்பதற்கான சீல் வைத்த கேள்விகள் 07 05-86ந் திகதி நண்பகல் 12 00மணிவரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும். இதற்காக சாவகச்சேரி நகராட்சி மன்றத்தில், மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரக் கட்டணமாக ரூபா 100/-ம், மீளளிக்கப்படும் கேள்விவைப்புப் பணமாக ரூபா 1000/- செலுத்தி 05-05-86ந் திகதி நண்பகல் 12-00மணி வரை பெறப்படும் கேள்விப் பத்திரங்களில் கேள்விகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். இக்குத்தகைக்கான ஆகக் குறைந்த கேள்வித் தொகை ரூபா 2,70.000/- ஆகும். சித்திபெறும் கேள்விக்காரர் அறிவிக்கப்பட்ட திகதியிலிருந்து மூன்று தினங்களுக்குள் கேள்வித்தொகையின் மூன்றிலொரு பகுதியை (1/3)ச் செலுத்திச் சபையுடன் ஒரு ஒப்பந்தம் செய்து கொள்ளவேண்டும். மிகுதிப் பணத்தை 31-10-86ந் திகதிக்கு முன்பு சரிசமமான தொகைகளாக மாதாந்தம் செலுத்துதல் வேண்டும் மேலதிக விபரங்களை சாவகச்சேரி நகராட்சிமன்ற காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

த. நவரத்தினராசா,
செயலாளர்,
(தலைவருக்காக)
நகரசபை, சாவகச்சேரி.

நகராட்சிமன்ற அலுவலகம்,
சாவகச்சேரி. [A-618]


# கணேசனை விடுவிக்கக் கோரி ஆர்ப்பாட்ட ஊர்வலம்

[யாழ்ப்பாணம்]

''அஸ்பெஸ்ரஸ்' கூரைத் தகட்டு தொழிற்சாலை முகாமைப்பணிப்பாளர் திரு. கணேசனை விடுதலை செய்யுமாறு கோரி நேற்று நூற்றுக்கு மேற்பட்ட தொழிலாளர்கள், சுலோக அட்டைகளுடன் யாழ். நகர் ஊடாக ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடத்தினார்கள்.

ஒலிபெருக்கி பொருத்தப்பட்ட கார் முன்செல்ல அதைத் தொடர்ந்து தொழிலாளர்கள் சுலோகங்களை எழுப்பியவாறு சென்றார்கள்.

மருதனாமடத்தில் நேற்றுக் காலை ஆரம்பமான ஊர்வலம், கொக்குவில் ஊடாக யாழ். நகர் சென்று, ஸ்ரான்லிவீதி ஊடாக நல்லூரைச் சென்றடைந்தது.

'ஆள் கடத்தலை நிறுத்து', 'கொலை கொள்ளைகளைத் நிறுத்து', 'தொழிலாளர்களை வாழவிடுங்கள்' என்ற சுலோகங்கள் அட்டைகளில் காணப்பட்டன.

''இன்று நம் தலைவருக்கு இக்கதி என்றால் நாளை எம் கதி என்ன? 'கேட்டுவாங்குங்கள், கொடுப்பதை வாங்குங்கள் கொள்ளை அடிக்காதீர்கள்'' என்ற கோஷங்களை எழுப்பியபடி ஊர்வலத்தினர் சென்றனர்.

'தொழிற்சாலை மூடப்பட்டதால் சுமார் 500 தொழிலாளர் குடும்பங்கள் பட்டினி என்று தெரிவித்த தொழிலாளர், விடுதலை செய்யப்படும் வரை போராட்டம் தொடரும் என்று கூறினார்கள்.

இம் மாதம் 4ம் திகதி நள்ளிரவு இனந்தெரியாதவர்களினால் முகாமைப்பணிப்பாளர் கடத்தப்பட்டதாகவும் அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

## புதிய யோசனை...

1-ம் பக்கத் தொடர்ச்சி)

புதிய இந்திய வெளியுறவுச் செயலாளர் ஆகியோருடன் பேச்சுநடத்தினர்.

இப்பேச்சுக்களின் இறுதியிலேயே இலங்கை யோசனைகளை த. வி. கூ. நிராகரித்திருப்பதாக திரு. அமிர்தலிங்கம் கூறினார்.

இதேவேளை, வடக்கு-கிழக்கு பகுதி ளில் தொடர்ச்சியாகத் தமிழர்கள் பாதிக்கப்பட்டுவருவதையும் திரு அமிர்தலிங்கம் குறிப்பிட்டதோடு, இப்பாதிப்புக்கள் தடுக்கப்படாதவரை, இலங்கை அரசிடமிருந்து எதனையும் நேர்த்தியாக எதிர்பார்க்கமுடியாது என்றார், [ய]

## அரசியல்..-

[1ம் பக்கத் தொடர்ச்சி]

''1986ம் ஆண்டு ஆரம்பத்திலிருந்து எனக்குத் தினக்குறிப்பு எழுத அனுமதிப்பதில்லை. இது கவலைக்குரிய விஷயம்.

''அவற்றுடன் அப்பாவித் தமிழர்கள் அநியாயமாகக் கொல்லப்படுவதும் நிறுத்தப்படவேண்டும்'' [ய-பி]


**31-ம் நாள் நினைவு நிழல்**

நற்செயல் புரிந்தவர் நாளும வாழ்வார்



பத்தலோமை பிலோமினா

மண்ணக மலவு: 25-05-1937

விண்ணக நிறைவு: 26-03-1986

விந்தையோ ஒருமாகம் வீட்டிலே காணவில்லை சிந்தையிலே நிதமும் செய்த செயலினை நினைப்பதினாலே வந்து நீர் அருவமாக வாழ்கிறீரம்மா எம்மோடு நித்தமாய் பிரிந்தீர் எமை விட்டு நினைக்கவே மனம் குமுறுதம்மா அன்னாரின் இறுதி சடங்கில் கலந்து கொண்டவர்களுக்கும் அனுதாபச்செய்தி அனுப்பியோருக்கும் எம் கலையினுடாக நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம்.

நின் பிரிவால் துயருறும்:
ஆருயிர் கணவன்,
அருமை பிள்ளைகள்,
அன்பு-மருமக்கள்,
மைத்துனிமார்,
சகோதரர்கள்,
சகலன்மார்.

372, கடற்கரை வீதி,
நாவாந்துறை. C 1983


## யாழ் - கொழும்பு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பிலிருந்து நேற்று யாழ்ப்பாணத்திற்கு லொறிகள எதுவும் உணவுப்பொருள்கள் ஏற்றிவரவில்லை.

நேற்றுமுன்தினம் உணவுப் பொருள்களை ஏற்றியலொறிகள் நேற்றுக்காலை கொழும்பிலிருந்து புறப்படவில்லை என்று யாழ் வர்த்தகர்களுக்குத்தகவல் கிடைத்துள்ளது. அநுராதபுரம் பகுதியில் ஏற்பட்ட பதற்றத்தினால் வாகனப் போக்குவரதது நடைபெறவில்லை எனக் கூறப்படுகிறது.

கொழும்பிற்கும் யாழ்ப்பாணத்திற்கு மிடையிலான தனியார் பஸ்சேவைகளும் நேற்று நடைபெறவில்லை. யாழ்ப்பாணத்திலிருந்து நேற்றுக்காலை புறப்பட்டுச்சென்ற சில தனியார் பஸ்கள் ஆனையிறவுவரை சென்று திரும்பிவிட்டதாகத் தெரியவருகிறது.

யாழ்தேவி'க்கு அநுராதபுரம் வரை யாழ் நகரிலிருந்து பிரயாணிகளைக்கொண்டு செல்லும் வ.பி.போ. பஸ் சேவையும் நேற்று நடைபெறவில்லை.

யாழ்ப்பாணத்திலிருந்து வந்த வ. பி.போ.ச.பஸ்ஸும் நேற்று வவுனியாவிற்கு அப்பால் செல்லவில்லை. யாழ்ப்பாணத்திலிருந்து மட்டக்களப்பிற்கும் நேற்று பஸ் செல்லவில்லை

யாழ்ப்பாணத்திலிருந்து வவனியாவரையுமே நேற்று வ பி போ.ச. பஸ்கள் சேவையில் ஈடுபட்டன லொறிகளும் யாழ்ப்பாணத்திலிருந்தும்நேற்றுக் கொழும்பு செல்லவில்லை. [க]

# இரு இளைஞர்கள் சுட்டுக்கொலை

[திருகோணமலை]

செல்வநாயகபுரத்தைச் சேர்ந்த மகேந்திரன் செல்லையா ஆகிய இரு இளைஞர்கள் தந்திக்கம்பங்களில் கட்டிவைக்கப்பட்டுச் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

நேற்றுக்காலை இச்சம்பவம் இடம்பெற்றது. இத்தண்டனைக்கான காரணங்கள் தெரிவிக்கப்படவில்லை. [மா]

## நான்கு குடும்பங்களுக்கு நஷ்டஈடு

[கொழும்பு]

அநுராதபுரம் பெற்றோல் களஞ்சிய குண்டு வெடிப்பில் பலியான நான்கு சிங்கள ஊழியர்களின் குடும்பங்களுக்கும் தற்காலிக நஷ்டஈடாக தலா 25 ஆயிரம்ரூபாய் வழங்கப்படவுள்ளது.

இதவேளை சம்பவத்தில் பலியான ஒன்பதுபேரின்மரண விசாரணைகளும் நேற்று அநுராதபுரத்தில் இடம்பெற்றன. [ய-ரா]

## சங்காபிஷேகம்

[யாழ்ப்பாணம்]

கோப்பாய் அருள்மிகு வெள்ளெருவைப் பிள்ளையார் கோவில் சங்காபிஷேகம் நாளை சனிக்கிழமை முற்பகலும் மாலை தண்டிகைத்திருவிழாவும் நடைபெறவுள்ளன.

## நெசவுப் பயிற்சி

(வேலணை)

நல்லூரிலுள்ள அரசாங்க நெசவுப்பாடசாலைக்கு 86/87ம் வருடகாலத்திற்கான நெசவுப் பயிற்சி வகுப்புகளில் தமிழ் மொழிமூலம் பயிற்சிபெற விரும்பும் விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் யாழ். மாவட்ட உதவிப்பு டவைக் கைத்தொழில் பணிப்பாளர் திரு சி. பாலசுப்பிரமணியம் அவர்களால் கோரப்பட்டுள்ளன.

இப்பயிற்சி வகுப்புகளுக்கு விண்ணப்பிப்பவர்கள் அடுத்த மாதம் 10ம் திகதிக்கு முன விண்ணப்பப் பத்திரங்களைப் பூர்த்திசெய்து அனுப்பும்படி கேட்கப்பட்டுள்ளனா.

## இருவர் சுட்டுக்..

[1 ம் பக்கத் தொடர்ச்சி]

கிழங்குபாளையம், பள்ளத்துச்சேனை, கல்குடாச்சோலை ஆகிய கிராமங்களிலேயே மேற்படி சம்பவம் இடம்பெற்றது.

இத்தேடுதல் வேட்டையில் பால்விற்பனைசெய்யும் இருவர்சுட்டுக் கொல்லப்பட்டனர் [மா]

# இந்த 25 குடும்பங்கள் மீண்டும் குடியேறத் தடை?

[வவனியா]

நெடுங்கேணிப் பகுதியில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களால் அகதிகளாக வெளியேறிய 52 குடும்பங்கள் மீண்டும் அங்குசென்று குடியேற அரசாங்கம் தடைவிதித்துள்ளதாகத் தெரியவருகிறது.

நெடுங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள வெடிவைத்தகல்லு, காட்டுப் பூவரசங்குளம், கோயில் புளியங்குளம், துவரமோட்டை. தனிச்கல்லு, பட்டிக்குடியிருப்பு ஆகிய ஆறுகிராமங்களிலிருந்து ஆயுதப்படையினரின் நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்ட 52குடும்பங்கள்வெளியேறி மருதோடையில் அகதிகளாக இருக்கிறார்கள்.

மேற்குறிப்பிட்ட 6 கிராமங்களும் டொலர்பாம், கென்பாம் ஆகியவற்றுக்கருகாமையில் இருப்பது தெரிந்ததே.

இக்கிராமங்களிலுள்ள 6 குளங்களிலும்இப்பொழுது நீர் தேங்கியிருப்பதால் விவசாயம் செய்வதற்கு அங்கு மீண்டும் சென்று குடியேறுவதற்கு அவர்கள் விருப்பம் தெரிவிததுள்ளனர்.

நாட்டில் அகதிகளாக வெளியேறியவர்கள், மீண்டும் தங்கள் சொந்த இடங்களுக்குச் சென்றுவசிக்கவேண்டும் என்று உத்தரவு பிறப்பித்துள்ள அரசாங்கம், மேற்குறிப்பிட்ட 6 கிராமங்களிலிருந்து வெளியேறியதங்களை ஏன் மீண்டும் அங்கு சென்று வசிக்க அனுமதி மறுக்கிறது என்பதுபற்றிக் கவலைதெரிவிக்கின்றனர். (யா

### மல்லாகம் பஸ் வேலைத்தளத்தில்

# கொள்ளைபோன பொருட்களை திரும்பவும் ஒப்படைக்கவும்

## வ. பி. போ. ச. தலைவர் வேண்டுகோள்

[யாழ்ப்பாணம்]

மல்லாகம் வ. பி.போ.சபை வேலைத்தளத்தில் இம்மாதம் 17 ம் திகதி முதல் 3 தினங்களாக இனந்தெரியாதவர்களினால், கொள்ளையடிக்கப்பட்ட சுமார் ஒரு லட்சம் பெறுமதியான பொருட்களை ஒப்படைக்குமாறு வ. பி. போ ச தலைவர் திரு. எஸ். கனகரத்தினம் வேண்டுகோள் விடுத்துள்ளார்

அந்த வேண்டுகோளில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது: வ. பி. போ. சபை மல்லாகம் பேரூந்து உடற்கோப்பு அமைக்கும் வேலைத்தளத்தில் இம்மாதம் 17 ம் திகதி முதல் தொடர்ச்சியாக மூன்று தினங்களுக்கு நடைபெற்ற கொள்ளையில் ஏறத்தாழ ஒரு லட்சம் ரூபா பெறுமதியான பொருட்கள் களவு போய் உள்ளன. இதனைச் செய்தவர்கள் ஆயுதம் தாங்கிய இனந்தெரியாத இளைஞர்கள் என எனக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

பஸ் பற்றுக் குறையினாலும், நிதி நெருக்கடியினாலும் இன்னலுற்று மாதாமாதம் ஊழியர்களின் வேதனத்தையே உரிய திகதிகளில் கொடுப்பதற்கு திண்டாடிக் கொண்டிருக்கும் இவ் வேளையிலும் கூட வடபிராந்திய போக்குவரத்துச் சபையில் பஸ் உடற்கோப்பு வேலைத் தளமொன்றை அமைக்க வேண்டுமென்ற பேராவாவினால் தூண்டப்பெற்று உயர் அதிகாரிகளின் அனுமதியைப் பெற்று வெகு அண்மையில் இவ் வேலைத்தளத்தை ஆரம்பித்தோம். உண்மையில் இவ் வேலைக்களம் 8 ஆண்டுகளுக்கு முன்னர் கட்டி முடிக்கப்பட்டதாயினும், நிதி நெருக்கடி காரணமாக தொழிற்பட ஆரம்பிக்கவில்லை இது முறையாக இயங்குமாயின் ஆண்டொன்றுக்கு 50 பேரூந்துக்களுக்கு உடற்கோப்பு அமைக்கலாம் கடந்த 4 ஆண்டுகளாக கொழும்புக்கு உடற்கோப்பு அமைக்கும் பணிக்காக அனுப்பப்பட வேண்டிய பேருந்துகள் நாட்டின் சீரற்ற நிலமை காரணமாக அங்கு அனுப்பப்பட முடியாமல் உள்ளது. இதனால் எமது பேரூந்துகளின் தரமும் வெகுவாகக் குன்றி நாம் அளிக்க விருப்பும் சேவையையும் பொதுமக்களுக்கு கிடைக்கச் செய்ய முடியாமல் உள்ளது.

வளரும் பயிரை முளையிலே கிள்ளுவது போல வேலைக் களத்தை ஆரம்பித்த ஒரு சில தினங்களுக்குள்ளேயே ஒரு லட்சம் ரூபா பெறுமதியான பொருட்கள் கொள்ளை போய் இருப்பதினால் இவ் வேலைக் களத்தின் எதிர் காலம் கேள்விக் குறியில் நிற்கிறது. ஆகவே இவ் வேலைக்களம் தொடர்ந்து இயங்கவும் அதனால் வடபிராந்தியத்தில் வாழ்கின்ற பயணம் செய்யும் பொது மக்களுக்கு நலமான சேவை கிட்டவும் வ. பி. போ. சபை ஊழியர்கள் தங்கள் தொழில் வாய்ப்பைப் பெருக்கிக் கொள்ளவும் உதவுமுகமாக மேற்குறித்த கொள்ளைபோன பொருட்களை உரியவர்கள் தயவுசெய்து எம்மிடம் ஒப்படைக்க வேண்டுமென வ. பி. போ. ச ஊழியர்கள் சார்பில் பணிவன்பான வேண்டுகோள் விடுக்கிறேன்.

### ஒஸ்மானியாவில் கூடிய மகாநாட்டில்

# முஸ்லிம்பகுதி கல்வி குறைபாடுகள் பற்றி ஆய்வு

(யாழ்ப்பாணம்)

வட மாநிலக் கல்விப் பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம், யாழ். வட்டாரத்திலுள்ள முஸ்லிம் பாடசாலைகளின் அதிபர்களைச் சந்தித்து கல்வி தொடர்பான பொதுவான குறைபாடுகளைக் கேட்டறிந்தார். இச்சந்திப்பு அண்மையில் யாழ். ஒஸ்மானியாக் கல்லூரி 'மஹ்மூத்' மண்டபத்தில் இடம் பெற்றது. பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்கம் ஆகியவற்றின் பிரதிநிதிகளும் இச்சந்திப்பில் கலந்து கொண்டனர்

இச்சந்திப்பின் போது முஸ்லிம் பகுதியில் நிலவும் பல வித கல்விக் குறைபாடுகள் ஆராயப்பட்டன பொம்மைவெளி மக்களுக்கான பாடசாலை ஆரம்பித்தல், பாடசாலை விட்டு விலகியோருக்கான கல்வி நெறிகளை ஆரம்பித்தல், மௌலவி ஆசிரியர் நியமனம் ஆகியவை பற்றியும், பாடசாலைகளில் நிலவும் இடவசதியின்மை, ஆசிரியர் பற்றுக்குறை ஆகியன பற்றியும் கலந்துரையாடப் பட்டன.

தங்கள் கல்விக்கந்தோருக்குச் சென்று கூற வேண்டியவற்றைத்தானாக முன்வந்து கேட்டறியும் கல்விப் பணிப்பாளரின் முயற்சியை யாவரும் பாராட்டினர்.

அங்கத்தவர்களின் வேண்டுகோள்களைப் பொறுமையுடன் கேட்டறிந்த கல்விப்பணிப்பாளர், தனது பதவிக்காலத்தின்போது தன்னால்இயன்றதை முஸ்லிம் மக்களுக்கு செய்து தருவதாக உறுதியளித்தார். ஈற்றில் ஐவர் கொண்ட ஒரு குழு தெரிவுசெய்யப்பட்டது. பாடசாலைகளின் அதிபர்களும் முன்னாள் மாவட்டசபைஉறுப்பினர் ஜனாப். எஸ். எம். சுல்த்தான் குழு உறுப்பினர்களாக ஏகமனதாகத் தெரிவு செய்யப் பட்டனர். [வி]

# இன்றைய பலன்

மாதம்- சித்திரை
திகதி- 12 (1986-4-25)
கிழமை- வெள்ளி
திதி- பிரதமை
பி. ப. வரை
நட்சத்திரம்- சுவாதி
மு. ப வரை

மேடம்- இதயங்கள் இணைவதற்கு இன்று நல்ல நாள். அபிப்பிராய பேதங்கள் மறையும் பிரிந்தவர்கள் மீண்டும் வாழக்கையில் இணைவர்

இடபம்- இன்னலின் பின்னலால் இதயம் வேதனைப்படும். வீட்டில் வைத்தியச் செலவு அதிகரிக்கலாம். நண்பர்கள் மத்தியில் அபிப்பிராய பேதம் தோன்றக்கூடும்.

மிதுனம்- கடந்துபோன சம்பவம் ஒன்று குறித்து கவலைகள் அதிகமாகும். பல வழிகளிலும் பணம் செலவாவதற்கு இடமுண்டு.

கடகம்- கண் துடைப்பு வேலைர்ள் நடக்கும். தற்பெருமைமூலம் தடுமாற்றம் ஏற்படும். பெரியோரைப் பகைத்துக் கொள்ளாமல் பொறுமையைப் பேணி நடக்கவும்.

சிங்கம்- கனிவான நினைவுகளில் இன்று ஆனந்தமாக மிதந்து செல்வீர்கள் கல்வித் துறையில் வித்துவத்தன்மை தென்படும். வாகனம் செலுத்துவோர் மக்களின் ஆதரவை பெறுவர்.

கனனி- இதயக்கமலம் இன்பத்தால் மலரும். இல்லத்தில் பிணைப்புகள் இறுகும். கடமையில் புதிய ஆர்வம் பிறக்கும்.

துலாம்- திகைக்க வைக்கும் சம்பவம் இன்று நடைபெறலாம். அரசினரின் ஆத்திரப் பார்வை உங்கள் பக்கம் திரும்ப முடியும். கோஷ்டிச் சண்டையில் மாட்டிக் கொள்ளாதிருக்கவும்.

விருச்சிகம்- குடும்ப வழியால் மனதிற்கு நிம்மதி பிறக்கும் நீண்டநாள் பூமிப் பிணக்கு சமரசமாக முடியும். காதல் விவகாரங்களுக்கு இடமுண்டு.

தனுசு- திரைமறைவில் சதிததிட்டம் உருவாகும். அடுத்துக்கெடுப்பதற்கு சிலர் முனைவர். சிலருக்கு நூதன ரோகம் தென்படலாம்.

மகரம்- தெய்வ நம்பிக்கையுடன் குறிக்கோளில் வெற்றியும் உண்டு லட்சியவாதிகளுக்கு பொன்னான நாள்.

கும்பம்- இன்று எதிர்பாராத வரவுக்குமிடமுண்டு. புதுத் தொழில்முறைகளை மனம் நாடும். நீண்ட பிரயாணத்திற்கும் இடமேற்படலாம்.

மீனம்- செலவுகள் அதிகமாகும். சிலர் கடன்படவும் நேரிடும். சமீபத்தில் நடந்து முடிந்த விடயம் மனதிற்கு வேதனையைத் தரலாம்.

**திருமலை**
**வே. ரவீந்திரன்**

# பேரூந்து நிலையம் திறந்து வைக்கப்பட்டது

[யாழ்ப்பாணம்]

''கடந்தகாலங்களில் சுமைதாங்கிகள், தண்ணீர்தொட்டிகள் ஆவுரஞ்சிக் கல்லுகள் பிரயாணிகளின் வசதிக்காக உருவாக்கப்பட்டிருந்தன. காலமும். கருத்தும் மாறிக் கொண்டு வரும் இக்காலத்தில் பேரூந்து நிலையங்கள் அமைக்கப்பட்டு பிரயாணிகளின் சௌகரியங்கள் ஓரளவிற்குப் பேணப்பட்டு வருகின்றன ''

இவவாறு கந்தரோடையில் ஸ்கந்தவரோதயாக்கல்லூரிக்கு முன்பாக அமைக்கப்பட்ட பேரூந்து நிலையக்தை மங்கள விளக்கேற்றித் திறந்து வைத்துப்பேசிய கந்தரோடைகிராம முன்னேற்றச் சங்கத் தலைவரும், தமிழ் கந்லதயா வித்தியாசாலை அதிபருமான திரு. அ. தற்பரானந்தன் கூறினர்.

காலஞ் சென்ற திருமதி நாசம்மா சுப்பிரமணியத்தின் ஞாபகார்த்தமாக அமைக்கப்பட்ட இந்த நிலயத் திறப்பு விழாவில் திரு தற்பரானந்தன் மேலும் பேசியதாவது;

திரு, திருமதி சுப்பிரமணியத்தின் குடும்பம் சமூகசேவையில ஈடுபட்டுவருவது யாவரும் அறிந்ததே யாழ்ப்பாணத்தில் மாத்திரமல்ல இலங்கையிலும் சர்வதேச அளவில் அக்குடும்பத்தின் பெயர் பிரபல்யமாகியுள்ளதை எமது கிராமத்தவர் பெருமைப்படவேண்டும். இந்த நிலையம் அன்னாரின்வாழ்வில் பசுமை நினைவுகளை பிரதிபலித்துக்கொண்டேயிருக்கும். என்று கூறினர்.


# தேவை

''ஈழநாடு'' தேசிய தமிழ் தினசரி பத்திரிகையின் உள்ளூர் செய்திசேவைக்கு கீழ் வரும் இடஙகளில் கடமை புரிய நிருபர்கள் தேவை:

1. சுன்ஞகம்
2. திருநெல்வேலி
3. வசாவிளான்
4. கொடிகாமம்.
5. அச்சுவேலி
6. நெல்லியடி
7. ஊரகாவற்றுறை

விண்ணப்பதாரிகள் தமிழ், ஆங்கில மொழித் தேர்ச்சி, கல்வித்தகைமை, அனுபவச்சான்றுப் பிரதிகளுடன் வதிவிடத்தை உறுதிப்படுத்தும் கிராமசேவகரின சான்றிதழ் பிரதியையும் இணைத்து சொந்தக் கையெழுத்தில் விண்ணப்பிக்கவும்.

**விண்ணப்பங்கள் 30-04-1986-ந் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.**

விண்ணப்ப மேலுறையின் இடதுபக்க மேல்மூலையில் 'நிருபர் பதவி' என்று குறிப்பிடல் அவசியமாகும்.

முகவரி:

நிர்வாகி,

**ஈழநாடு லிமிட்டெட்,**

த. பெ. இல. 49, யாழ்ப்பாணம்.

(A 602)



DIPLOMA IN NURSING

**தாதிப் பயிற்சியில் டிப்புளோமா**

புதிய பயிற்சிநெறிகள் உடன் ஆரம்பம்

- ★ தமிழ்மொழி விரிவுரைகள் மாணவர் நலன் கருதியே
- ★ பிரத்தியேக ஆங்கில வகுப்புக்களும் நடாத்தப்படும்.
- ★ பாமஸிப் பயிற்சியும், மகப்பேறு மருத்துவமும் போதிக்கப்படும்.

உடன் தொடர்பு கொள்க:

NORTH CEYLON TECHNICAL INSTITUTE,
14, ST. PETERS LANE, HOSPITAL ROAD, JAFFNA.

மேற்படி பயிற்சி நெறி

புதிதாக ஆரம்பமாகவுள்ள எமது புத்தூர் கிளை கல்வி நிறுவனத்திலும் கோப்பாய், நீர்வேலி, சிறுப்பிட்டி, புத்தூர், ஆவரங்கால், அச்சுவேலி மாணவ மாணவிகளின் வசதிக்காக

**ஆரம்பம்: 30 – 4 – 1986**

உடன் தொடர்பு கொள்க:

**NORTH CEYLON TECHNICAL INSTITUTE**

14, ST. PETERS LANE,
HOSPITAL ROAD, JAFFNA.
Tel: 24355

(A 461)

ஆர்ப்பாட்டம் நடத்த

# கூட்டுறவு வர்த்தக ஊழியர் சங்கம் தீர்மானம்

[யாழ்ப்பாணம்]

வடக்கு, கிழக்கிலுள்ளயுத்த நிலைமை காரணமாக அப்பகுதிகளிலுள்ள கூட்டுத்தாபன கூட்டுறவு, வர்த்தக ஊழியர்களுக்கு விசேட கொடுப்பனவு வழங்கப்படுவதற்காகவும், ஆயுள் காப்புறுதியும், பாதுகாப்பும் பெற்றுக்கொடுப்பதற்காகவும் ஆர்ப்பாட்ட நடவடிக்கைகளில் இறங்க கூட்டுத்தாபன கூட்டுறவு வர்த்தக ஊழியர் சங்கம் தீர்மானித்துள்ளது.

நவ சமசமாஜக் கட்சித்தலைவர் திரு. வாசுதேவநாணயக்கார தலைமையில் மேற்படி சங்கக் கூட்டம் அண்மையில் கொழும்பில் நடைபெற்ற சமயம் மேற்கண்ட தீர்மானம் எடுக்கப்பட்டது.

வடக்கு, கிழக்கில் நடைபெறும் யுத்த நிலையினால் பெரும் நெருக்கடிகளுக்கு மத்தியில்வாழும் கூட்டுத்தாபன, கூட்டுறவு ஊழியர்களின் சேவைப் பிரச்னைகள் மற்றும் பொதுப்பிரச்னைகள் சம்பந்தமாக விசேட நடவடிக்கைகளில் இறங்குவது பற்றியும் தீர்மானம் செய்யப்பட்டுள்ளது.

கூட்டுத்தாபன, கூட்டுறவு ஊழியர்கள் தமது கடமை நிமிர்த்தம் கொழும்புக்குச் செல்வதில் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குகிறார்கள். இவற்றை நிவர்த்திக்க விசேட ஒழுங்குகள் செய்வதற்கு சங்கத்தில் அங்கத்துவம் வகிக்காதவர்களுக்கும் நன்மை பயக்கும் விதத்தில் பல்வேறு நடவடிக்கைகளைமேற்கொள்ளவும் சங்கம் தீர்மானித்துள்ளது.

[ஐ]

## மரக் கூட்டுத்தாபன ஊழியர்க்கு ரூபா ஆயிரம் வழங்க கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

வடக்கு, கிழக்குப் பகுதிகளில் நிலவும் யுத்தநிலைமை காரணமாக அந்தந்தப் பகுதிகளில் கடமையாற்றும் அரச மரக் கூட்டுத்தாபன ஊழியர்களுக்கு விசேட கொடுப்பனவாக மாதம் ஒன்றுக்கு ரூபா ஆயிரம் வழங்கப்பட வேண்டும் எனக் கூட்டுத்தாபன, கூட்டுறவு வர்த்தகர் சங்கம், அரச மரக்கூட்டுத்தாபனத் தலைவரிடம் கேட்டுள்ளது.

அரச மரக் கூட்டுத்தாபன ஊழியர்கள் பெரும் சஷ்டமான நிலையில் சீவித்துக்கொண்டிருக்கின்றனர். சில ஊழியர்கள் உயிர்நீத்தும் உள்ளனர். மேலும் யுத்தநிலைமை காரணமாகப் பொருட்களின் விலைகளும், போக்குவரத்துக் கட்டணங்களும் உயர்ந்துள்ளபடியால் மேற்படி ஊழியர்கள் தாங்கொணு பொருளாதார நெருக்கடிக்குள் தள்ளப்பட்டிருக்கின்றனர். எனவே விசேட கொடுப்பனவு கொடுக்கப்பட வேண்டும் என மேற்படி சங்கம் அரச மரக்கூட்டுத்தாபனத் தலைவருக்கு அனுப்பியுள்ள கடிதமொன்றில் தெரிவித்துள்ளது.

[ஐ]

## கிரிக்கெட் அரியாலை பி பிரிவு வெற்றி

[யாழ்ப்பாணம்]

இணுவில் கலையொளி விளையாட்டுக்கழகம் நடாத்திவரும் கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் அரியாலை ஐக்கிய விளையாட்டுக்கழகத்தின் 'பி' விளையாட்டுபிரிவுஈச்சமோட்டைஏ' பிரிவைத் தோற்கடித்தது.

இறுதிப் போட்டியில் அரியாலை 'பி' பிரிவு பங்குபற்றும் இப்போட்டிகள் பாஷையூர் சென் அன்ரனிஸ் விளையாட்டு மைானததில் நடைபெறுகின்றன.

வவனியாவில்

## ஒரே இரவில் மூன்று வீடுகளில் கொள்ளை

[வவனியா]

வவனியாவில் ஒரே இரவில் மூன்று விவசாயிகள் வீடுகள் ஆயுதம் தாங்கிய இளைஞர் கோஷ்டியினல் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

கடந்த திங்கள் இரவு வவனியாவில் பெரியபுளியானம்குளம் என்னுமிடத்தில் உள்ள திரு. நடராசா, திரு. சிற்றம்பலம், திரு. சபாரத்தினம் ஆகிய விவசாயிகளின் வீடுகளிலே இக்கொள்ளைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

கொள்ளையர் வீடுகளின் கதவைத் தட்டியபோது வீட்டில் உள்ளவர்கள் திறக்காமல் இருக்க துப்பாக்கியால் சுட்டு கதவுகளைத் திறந்து துப்பாக்கி முனையில் நகை, பணம் என்பன கொள்ளையடிக்கப்பட்டுள்ளன. இக்கொள்ளை தொடர்பாக செட்டிகுளம் இராணுவ முகாமில் புகார் செய்யப்பட்டுள்ளது.

## ''விவசாயிகளுக்கு கிருமிநாசினி பற்றிய அறிவு புகட்டப்படவேண்டும்''

(நெடுந்தீவு)

''கிருமிநாசினிகளை வியாபார நோக்கத்துடன் மட்டும் விற்பனை செய்யாது, விவசாயிகளுக்கு அவற்றின் தொழிற்பாடு, தன்மை போன்றவற்றையும் எடுத்துக்கூறி சிறப்புறப்பாவிப்பதற்கான ஆலோசனையையும் வழங்க வேண்டும்''.

இவ்வாறு யாழ் மாவட்டத்தின கிருமிநாசினிகள் விற்பனவுசெய்யும் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் அதிகாரம் பெற்ற விற்பனையாளர்கள் மத்தியில் உரையாற்றிய, விவசாயப் பகுதியின் பூச்சிகள் கட்டுப்பாட்டுப் பகுதியின்அதிகாரம் பெற்ற அலுவலர் ஆர். இரகுபதி கேட்டுக்கொண்டார்.

பூச்சிநாசினி கட்டுப்பாடு பற்றிய 1980ம் ஆண்டு33 இலக்கச் சட்டத்தின் கீழ் விற்பனையாளர்களையும். கையிருப்பாளர்களையும் பதிவதற்கான கருத்தரங்கு அண்மையில் திருநெல்வேலி விவசாயப் பாடசாலை விரிவுரை மண்டபத்தில் நடைபெற்றது.

தொடர்ந்து அவர் பேசுகையில்: விற்பனையாளர்கள் விஸ்தரிப்புரீதியாக செயற்பட வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

பிரதி விவசாயப் பணிப்பாளர் எஸ. கிருஷ்ணபிள்ளை வரவேற்புரை நிகழ்த்தினர்.

சுகாதார இலாகாவைச் சேர்ந்த வைத்தியக் கலாநிதி எஸ். ஜேம்ஸ், கிருமிநாசினியால் பாதிக்கப்பட்டவருக்கு எவ்வாறு உதவிகள் அளித்து உடன் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் என்று தெளிவுபடுத்தினர்.

கிருமிநாசினி கையாளுதல், களஞ்சியப்படுத்தல் எவ்வாறு என்பதுபற்றி வி. கணேசு விளக்கினர்.

அதைத்தொடர்ந்து பலர் உரையாற்றியதையடுத்து விவசாய அலுவலர் ஜே. பரமநாதன் நன்றியுரை வழங்கினர்.

## இன்று வவனியாவில் ஆர்ப்பாட்ட ஊர்வலம்

வவனியா]

கடந்த 14-ந் திகதியன்று லிபியாமீது அமெரிக்கா நடாத்திய விமானத் தாக்குதலைக் கண்டித்து வவனியாவில் இன்று வெள்ளிக்கிழமை முஸ்லிம்கள் ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றை நடாத்தவுள்ளனர்.

பள்ளிவாசல் தொழுகைக்குப் பின் இவ்வார்ப்பாட்ட ஊர்வலம் நடைபெற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

[வா]

# 'வழிபாட்டு இடங்களுக்கருகில் இராணுவ முகாம் இருக்கலாகாது''

## இந்து கோயில்களின் பாதுகாப்பு அமைப்பு அரசிடம் வற்புறுத்து

[யாழ்ப்பாணம்]

''எந்த இராணுவ முகாமும் வழிபாட்டு ஸ்தலங்களுக்கு அண்மையில் இருக்கக் கூடாது என்ற நடைமுறையை அரசாங்கம் உடனடியாக அமுல் செய்யவேண்டும்.''

இவ்வாறு இலங்கையிலுள்ள இந்துக் கோயில்களினதும், தாபனங்களினதும் பாதுகாப்புக்கான அமைப்பின் நிர்வாக சபை கூடி தீர்மானம் எடுத்துள்ளது.

நல்லை ஆதீனத்தில் இடம்பெற்ற இக்கூட்டத்தில் ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகளும் இக்கூட்டத்தில் கலந்து கொண்டார்.

1985-ம் ஆண்டு ஜனவரி 14-ம் திகதி தொண்டமானறு செல்வச்சந்நிதிக்கு அண்மையில் இராணுவமுகாம் அமைக்கப்பட்ட ஆரம்ப காலங்களில் மேற்படி ஆலய நித்தியபூசைகள் இடையூறின்றி நடக்க முடியாமல் இருந்து வந்தது. ஆனால் இன்று நித்தியகருமங்கள் எதுவுமே நடைபெறவில்லை. ஆலயத்தின் பூசசர் கொலை செய்யப்பட்டுள்ளார். தேர், பக்தர் மடங்கள் எரிக்கப்பட்டுள்ளன.

இந்து கலாசார அமைச்சர் இவ்விடத்துக்கு நேரடியாக விஜயம் செய்து ஆலயத்தினைப் பார்வையிடவேண்டும்.

'உப்புமால்' என்ற இடத்திலேயே முன்பு இராணுவ முகாம் இருந்தது. அங்கு தொண்டமானறு முகாமை உடனடியாக இடமாற்றம் செய்யவேண்டும்.

### 'விக்கிரகம் அகற்றல்'

இந்து ஆலயங்களில் உள்ள விக்கிரகங்களை அகற்றும் நடவடிக்கைகளை மிகவும் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

ஆலய பூசைகளை இடையூறின்றிச்செய்யலாம் என்று அரசாங்கம் வானெலி, தொலைக்காட்சியில் அறிவிப்புச் செய்கிறது. மறுபுறம் இராணுவத்தினரால் அனர்த்தங்கள் விளைவிக்கப்படுகின்றன. இத்தகைய செயற்பாடுகள் இந்து ஆலய பக்தர்களின் மனதைப்புண்படுத்தும் செய்கைகளாகும்.'' என அத்தீர்மானத்தில் கூறப்படுகின்றது.

சகல அரசாங்க அதிபர்களிடமும் தொடர்பு கொண்டு அவர்கள் மூலமாக உதவி அரசாங்க அதிபர், கிராம சேவை அலுவலர் ஊடாக ஆலய விபரங்களைச் சேகரிக்க சபை உத்தேசித்துள்ளது என்று சபையின் செயலாளர் திரு. தி தவராசா தெரிவித்தார். [ஐ]

## அமரர் காசிநாதருக்கு அஞ்சலி

[கிளிநொச்சி]

தலைசிறந்த தொழிற்சங்கவாதியை இழந்து தவிக்கிறோமென்று ஆசிரியர் தொழிற்சங்கவாதியும் சமூகத் தொண்டனுமான அமரர். த. காசிநாதனின் மறைவிற்கு அஞ்சலி தெரிவித்து உரையாற்றுகையில் முன்னுள் கல்விப்பணிப்பாளரும் பிரஜைகள் குழுப் பிரமுகருமான தி. மாணிக்கவாசகர் குறிப்பிட்டார்.

சரசாலை சாவகச்சேரியில் வைக்கப்பட்டிருந்த அமரர் காசிநாதரின் பூதவுடலிற்கு மாணவர்கள் ஆசிரியர்கள், தொழிற்சங்கவாதிகள்உட்பட பெரும் தொகையான பொது மக்கள் அஞ்சலி செலுத்தினர்கள்,

தமிழாசிரியர் சங்கப் பொது செயலாளர் த. மகாசிவம், வட இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க செயலாளர் எஸ் சிவபாலசிங்கம் உட்பட வட பகுதியில் உள்ள சுமார் 100 அதிபர்களும் அமரருக்கு அஞ்சலி செலுத்தினர்கள்.

## 83க்குப்பின் சேதமுற்ற ஆலய விபரம் சேகரிப்பு

[யாழ்ப்பாணம்]

இந்து ஆலயங்களின் விபரங்களைச் சேகரிப்பதில் இலங்கையிலுள்ள இந்துக் கோயில்களினதும், தானங்களினதும் பாதுகாப்புக்கான அமைப்பு மிகவும் சுறுசுறுப்பாகச் செயல்படுகிறது.

நல்லை ஆதீன முதல்வரை போஷகராகக் கொண்டு செயல்பட்டுவரும் இவ்வமைப்பு 1977ம் ஆண்டுமுதம்1983ம் ஆண்டு காலங்களில் இந்து ஆலயங்களுக்கு ஏற்பட்ட சேதவிபரங்களை ஏற்கனவே சேகரித்து வைத்துள்ளது.

1983ம் ஆண்டுக்குப் பிறகு ஏற்பட்ட இனக்கலவரங்கள் ஆயுதப்படைகளின் அத்துமீறல் செயல்கள் என்பனவற்ருல் இந்து ஆலயங்களுக்கு ஏற்பட்டுள்ள சேதவிபரங்களையே தற்சமயம் மேற்படி சபை சேகரிப்பதில் தீவிரமாக ஈடுபட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட கோவில் தர்மகர்த்தாக்கள் அல்லது கோயில் உரிமையாளர் தமது கோவிலுககு ஏற்பட்ட சகல சேதவிபரங்களையும் இச்சபைக்கு அறிவிக்கும்படி கேட்கப்பட்டுள்ளனர்.

கோவிலுக்கு சேதம் ஏற்படாதிருந்த போதிலும் கோவிலின் நித்திய கருமங்களைச் செய்யமுடியாத நிலையில்உள்ள ஆலய உரிமையாளர்களும் சேதம் விளைவிக்கப்பட்ட கோவில் விபரங்களை அரசாங்கத்துச்கு ஏற்கனவே தெரிவித்திருந்தவர்களும் தமது ஆலயங்களுக்கு ஏறபட்டுள்ள சேதவிபரங்களையும் கோவில் கட்டிடங்களுக்கு, அர்ச்சகருக்கு, ஊழியர்களுக்கு இவர்களின் குடும்பங்களுக்கு ஏற்பட்ட சகல விபரங்களையும்மதிப்பீட்டுடன் தெரியப்படுத்துமாறு இச்சபை கேட்டுள்ளது.

## பண்டிதமணி நினைவாக கிராம முன்னேற்றம்

[கிளிநொச்சி]

பண்டிதமணி கணபதிப்பிள்ளையின் பெயரால் அவரது நினைவாக அபிவிருத்தி செய்யப்படவுள்ள தனங்களப்புச் கிராமததை முன்னேற்றுவது தொடர்பான விசேட பொதுக் கூட்டமொன்று எதிர்வரும 27ம் திகதி ஞாயிற்றுச் கிழமை காலை தனங்களப்பில் நடைபெறவுள்ளது

இக் கூட்டம் ஆத்மஜோதி ஆசிரியர் நா. முத்தையா தலைமையில் நடைபெறும். தனங்களப்பில் உள்ள பல்வேறு பொது ஸ்தாபனங்களின் பிரதிநிதிகள் பண்டிதமணியின் மாணவர்கள், அபிமானிகள் உட்படப்பலர் இக் கூட்டத்தில் கலந்து கொள்வார்கள்.

## அஞ்சலிக் கூட்டம்

[யாழ்ப்பாணம்]

யூனியன் கல்லூரி முன்னுள் அதிபர் அமரர் ஐ. பி துரைரத்தினம் அவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் முகமாக கூட்டமொன்று கல்லூரி பழைய மாணவர்சங்கதலைவர் திரு ஆ. ந இராசேந்திரன் தலைமையில் வரும் 27ம் திகதி யூனியன் கல்லூரி மண்டபத்தில நடைபெறும் கல்லூரி பழைய மாணவர் சங்க ஆதரவில் இக் கூட்டம் நடைபெறும்

## புதிய நெறியாளர் சபை

[வேலணை]

வேலணை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கான புதிய நெறியாளர்சபை ஒன்றுயாழ். கூட்டுறவு உதவி ஆணையாளரினுல் நியமிக்கப்பட்டுள்ளது.

காசோலைகள் மூலமாகச் சம்பளப் பணத்தை பெற்றுக் கொள்வோர், பென்சன்பணம் பெவோர், வங்கி வாடிக்கையாளர்கள் ஆகியோர் செய்து கொண்ட புகார்களையடுத்தே இந்தசபை நியமிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மக்கள் எழுச்சியுடன் மே தினம்

[யாழ்ப்பாணம்]

மேதினத்தின் நூற்றாண்டுப் பிரகடனத்தை தமிழ்த் தேசிய இனத்தின் விடுதலைப் பிரகடனமாக மக்கள் எழுச்சியுடன் யாழ் நகரில் நடத்துவதென அண்ணு தி. மு. க. நடவடிக்கைகுழு தீர்மானித்துள்ளது.

அண்ணு தி. மு. க நகரச் செயலகததில் பொதுச் செயலாளர் பொன் மதிமுகராசா தலைமையில் கடந்த கூட்டத்தில் இம்முடிவு எடுகப்பட்டது.

வெகுஜனக் கூட்டு அமைப்புகளுடன் இணைந்து மேதினத்தை நடத்துவதென்றும்: தமிழ்ப்பிரதேசத்தில் நடக்கும் பலகொலைகளை உலசத்திற்கு எடுத்துக் காட்டும் விதத்தில் மே தினத்தை நடாத்துவதென்றும் முடிவு செய்யப்பட்டது.

[மா]

ஈழநாடு
NATIONAL THAMIL DAILY
வெள்ளிக்கிழமை 25-4-86

# "வடக்கு, கிழக்கில் இளைஞர்களை அழிக்க அரசு முயல்கிறது" நல்லநாயகம் வழக்கில் சாட்சியம்

## புதிய எம்.பி.க்கள் சத்தியப்பிரமாணம்

(கொழும்பு)

ஒருமாதகால இடைவெளிக்குப்பின் இன்று பாராளுமன்றக்கூட்டம் நடைபெறும்.

இக்கூட்டத்தொடரில் புதிய எம். பி க்களான திரு. ஆனந்த குமாரசிறி ஐ.தே க. (வெள்ளவாய), திரு. ரிச்சர்ட்பத்திரன ஸ்ரீ, ல. சு. க. (அக்மீமன) ஆகியோர்சத்தியப்பிரமாணம் செய்துகொள்வார்கள். [ரா]

## வீட்டை எரித்து தற்கொலை முயற்சி

[மாவிட்டபுரம்]

தனக்குத் தீ மூட்டியதுடன் வீட்டுக்கும் தீ மூட்டிய இளைஞர் ஒருவர் கருகிய நிலையில் மீட்கப்பட்ட சம்பவம் ஒன்று மாவிட்டபுரத்தில் இடம்பெற்றுள்ளது.

மாவிட்டபுரத்தைச் சேர்ந்த வைரமுத்து தங்கன் [வயது22) என்ற மேற்படி இளைஞன், வீட்டில் யாரும் இல்லாத நேரத்தில்வீடுமுழுவதும்மண்ணெண்ணெய் ஊற்றிவிட்டு தனக்கும் மண்ணெண்ணெய் ஊற்றி நெருப்பை பற்றவைத்துள்ளார். யாரும் சென்று மீட்க முடியாதநிலையில் வீடும் தீப்பற்றியதால் கருகிய நிலையில் பின்னர் அவர் மீட்கப்பட்டார்.

சித்தசுவாதீனமற்றவரான இவர் இதற்கு முன்பும் தற்கொலை முயற்சியில் இறங்கியதாக தெரிவிக்கப்பட்டது.

[கொழும்பு]

''துறைநீலாவணையில் கைதான 35தமிழ் இளைஞர்களைத் திருக்கோவில், அக்கரைப்பற்று பகுதிக் கடற்கரையருகே கூட்டிச்சென்று அவர்களைக் கொண்டே குழிகள் தோண்டச்செய்து அந்தக் குழிக்குள்ளே அவர்களைச் சுட்டுக்கொன்று பொலிஸ் கொமாண்டோக்கள் மூடினுர்கள். அடுத்த நாளும் முகாமிலிருந்து 19 தமிழ் இளைஞர்களை அதே இடத்துக்கு கொண்டு சென்று அவ்வாறே செய்தார்கள்''.

என திரு. நல்லநாயகம் மட்டக்களப்பு பஸ் நிலையத்தில் வைத்து கூறிக்கொண்டிருந்ததை நான் கேட்டேன்.

இவ்வாறு 'D-38' என்னும் ஆவணத்தின்படி தனதுபெயர் முகவரியை ரகசியமாக வைத்திருக்கும் ஒருவர் கொடுத்த வாக்குமூலத்தில் கூறினுர்.

கல்முனைப் பிரஜைகள் குழு முன்னுள் தலைவரும், கனேடியப்பிரஜையுமான திரு. போல் வேலுப்பிள்ளை நல்லநாயகத்துக்கு எதிராக அவசரகாலச் சட்டவிதிகளின்கீழ் கொழும்பு மேல்நீதிமன்ற நீதிபதி கே. விக்னராஜா முன்னிலையில் வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டது

கிளர்ச்சியைத் தூண்டுதல் தவறுனவதந்திகளைச்கொண்ட அறிக்கைகளை வெளியிடல் ஆகிய குற்றச்சாட்டுக்களின் கீழ் அவர் மீது வழக்குதொடரப்பட்டது.

மேல்நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணத்தின் மீதான குறுக்குவிசாரணை 23ம் திகதிபுதனன்று செய்யப்பட்டு பொலிஸ் அத்தியட்சகர் திரு பியசேனவுக்கு சிரேஷ்ட சட்டத்தரணி எஸ். நடேசன் கியூ. ஸி. மூலம் வாசித்துக் காட்டப்பட்டது.

திரு. நல்லநாயகம் குறித்து அந்த ஆவணத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

''வட-கிழக்குப் பகுதியிலுள்ள தமிழ் இளைஞர்களை அழிக்கும் முயற்சியில் அரசு இறங்கியுள்ளது. நாம் இதற்கு எதிராகக் கிளர்ந்து எழும்ப வேண்டும் அத்துடன் தீவிர பிரசாரமும் செய்யவேண்டும். என்று அங்கு குழுமிநின்றவர்கள் மத்தியில் கூறினுர்''.

சிரேஷ்ட சட்டத்தரணி நடேசன் கியூ. ஸி. (திரு. பியசேனவைப் பார்த்து) நல்லநாயகம் இவ்வாறு கூறியிருப்பார் என நம்புகிறீர்களா?'' என்று கேட்டபோது.

''இவ்வாறு அவர் பொய் பிரச்சாரம் செய்வதாக நம்பி விட்டேன்'' என்று திரு. பியசேன கூறினுர். விசாரிக்கும்படி தேசிய புலனாய்வுப் பிரிவினருக்கு உத்தரவிட்டேன். மேலும் இதுகுறித்து [பி]

## அநுராதபுரம்...

1ம் பக்கத் தொடர்ச்சி]

தற்கும், மூதூரில் சிங்களக் குடியேற்றங்களை விஸ்தரிப்பதற்குமாக இஸ்லாமிய மக்கள் மீது தொடரும் திட்டமிட்ட தாக்குதல்கள் நிறுத்தப்படல் வேண்டும்.

[2] பலாலி இராணுவ முகாம் விஸ்தரிப்பையும், சர்வதேசவிமான நிலையம் என்ற போர்வையில் அமெரிக்க விமானத்தளம் அமைக்கும் திட்டத்தையும் கைவிடுவதுடன் அயலிலுள்ள மக்களை அப்புறப்படுத்த மேற்கொண்டு வரும்தொடர்ச்சியான விமான ஹெலிகொப்டர்தாக்குதல்களையும் உடன் நிறுத்தவேண்டும்.

[3] கிளிநொச்சி, வவனியா, அக்கரைப்பற்று, மூதூர் பகுதிகளில் வயல்களை நாசமாக்கியும், பொதுமக்களை சுட்டுக்கொன்றும் கிராம மக்களை விரட்டியடிக்கும் கெடுபிடிகளை கைவிடல் வேண்டும்.

[4] பயங்கரவாத தடைச் சட்டம் என்ற போர்வையின் கீழ் வடக்கு. கிழக்கு மலையகப் பிரதேசங்கள் உட்பட ஏனைய பகுதிகளிலும் கைது செய்யப்பட்ட அனைவரும் விடுதலை செய்யப்படல் வேண்டும்.

[5] கடலசட்டம் நீக்கப்படுவதுடன், கரையோர மக்கள் மீன்பிடிக்க அனுமதிக்கப்படல் வேண்டும். மன்னர் கரையோரங்களில் ஆயுதம் தாங்கிய சிங்களவர்களை நிறுத்தி கடலாதிக்கத்தைக் கைப்பற்றும் திட்டத்தைக் கைவிடல் வேண்டும்,

மேற்படி இந்த நிபந்தனைகள் நிறைவேற்றப்படாது அலட்சியம் செய்யப்படும யின் நாட்டின் சகலபகுதிகளிலும் எமது இராணுவ நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப் படுமென்பதை முன்னெச்சரிக்கையாக கூறிக்கொள்ள விரும்புகிறோம்.

தலைமன்னர்ப் பகுதியில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களைத் தடுத்துநிறுத்தும் நோக்கில் 09-04-86 அன்று எம்மால் மேற்கொள்ளப்பட்ட அதிரடித் தாக்குதலில் ஒரு பொலிஸ் உயரதிகாரி உட்பட ஐந்துபேர் கொள்ளப்பட்டனர். இதில் ஆயுதப்பயிற்சிபெற்ற இரு சிங்கள ஊர்காவல் படையினரும் சிக்கிக்கொண்டனர். இவற்றுடன் 18-03-86 அன்று கொழும்பில் ''காஸ் நிரப்பு நிலையம்' ஒன்றும் சேதப்படுத்தப்பட்டுள்ளது.

இபபத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1986-ம் ஆண்டு சித்திரை மாதம் 25-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B 1003/81 Eelanadu P. O. Box 49, Telegram, Eelanadu, Telephone, 22389, 24126

## மரண அறிவித்தல்

### திரு. சுப்பையா மார்க்கண்டு

சாவகச்சேரியைச் சேர்ந்த சுப்பையா மார்க்கண்டு காலமானுர், இவர், சிவபாக்கியத்தின் கணவரும், தவராணியின் தந்தையும், ஜெயராசாவின் மாமனுருமாவார். அன்னுரின் ஈமக்கிரியைகள் இன்று (25-4-86) பிற்பகல் 4 மணிக்கு சாவகச்சேரி கண்ணுடிப்புட்டி மயானத்தில் நடைபெறும். தகவல்: ஜெயராசா

சிவன்கோவிலடி,
சாவகச்சேரி. (A 619)

### செல்வி சிவாஜினி குணநாயகம்

கொக்குவில் இந்துக் கல்லூரி மாணவி செல்வி சிவ ஜினி காலமானுர். இவர் திருநெல்வேலி வடக்கு குணநாயகம்-பராசக்தி தம்பதிகளின் அன்பு மகளும், அருள்வரதன், அருள்குமரன், அருட்செல்வன், அருட்சொரூபன், அருள்ஈசன், அருட்கண்ணன் ஆகியோரது அன்புச் சகோதரியும் ஆவார். ஈமக்கிரியைகள் இன்று [25-4-86] பிற்பகல் மூன்று மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்கு திருநெல்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்ருர், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: ஐ. அருள்நந்தி, [C 1986]

### வைத்திலிங்கம் சீவரத்தினம்

சுதுமலையை பிறப்பிடமாகக் கொண்டவரும் உரும்பிராய் வாசியுமான வைத்திலிங்கம் சீவரத்தினம் (முன்னுள் சிருப்பர், ஸ்ரேற்பாங்க் ஒவ் இந்தியா)காலமானுர். இவர் அன்னபூரணத்தின் (ஆச்சியம்மா) அன்புக்கணவரும், உரும்பிராய் சிவசம்பு வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் மருமகனும், தவசோதி, பரமேஸ்வரி, சிவசோதி (U K.), கதிர்காமநாதன் (U K ), றட்ணஜோதி ஆகியோரின் அன்புத்தந்தையும் கனகசபாபதி J P. (தலைவர் நல்லூர் ப நோ. கூ. சங்கம்), இராசேந்திரம் (ஏ. எம் சி மன்னுர்), இராசலிங்கம் (கணக்காளர் U.K.), காயித்திரி (சட்டத்தரணி U.K.) ஆகியோரின் அன்பு மாமனுரும், அழகரத்தினம்(மலேசியா), நவரத்தினம் (மலேசியா), சரஸ்வதி செல்லத்துரை (மலேசியா), யோகேஸ்வரி மணியம்(மலேசியா) ஆகியோரின் மைத்துனரும், நிரஞ்சன், நிருசன், பிரவின், கிருஷ்ணு [U K.] ஆகியோரின் பேரனுமாவர் அன்னுரின் ஈமக்கிரியைகள் உரும்பிராய் இல்லத்தில் இன்று [25-4-86] காலை10மணிக்கு நடைபெற்று தகனக்கிரியைக்காக வேம்பன்மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். தகவல்: கு. அம்பிகானந்தன், உரும்பிராய்.

(C 1984)

## மரண அறிவித்தல்

### திரு. அந்தோனி அகஸ்ரீன்

சுன்ணுகத்தைச் சேர்ந்த திரு. அந்தோனி அகஸ்ரீன் காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற திருமதி சிசிலியா அகஸ்ரீனின் அன்புக் கணவரும், திருமதி சற்குண அலங்காரம், அந்தோனிப்பிள்ளையின் அன்புத் தந்தையும், காலஞ் சென்ற திரு. அந்தோனிப்பிள்ளையின் (ஆசிரியர்) அன்பு மாமனுரும் ஆவார். அன்னுரின் பூதவுடல் வெள்ளிக்கிழமை [25-4-86] காலை 8-00 மணியளவில் புனித அந்தோனியார் கோவில் வீதியிலுள்ள அவரது இல்லத்திலிருந்து நல்லடக்கத்திற்காக சுன்ணுகம் புனித அந்தோனியார் ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு திருப்பலியுடன் நல்லடக்கம் செய்யப்படும். இவ்அறிவித்தலை உற்ருர், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

'வளர்மதி',
புனித அந்தோனியார் கோவில் வீதி,
சுன்ணுகம்.

தகவல்-
A. F. தெய்வேந்திரராஜா.
[C 1979]

### கந்தவனம் சீவரட்ணம்

[இளைப்பாறிய சிறைச்சாலை தொழில் நுட்பவியலாளர்]

கொற்ருவத்தை கிராம முன்னேற்றச் சங்கத் தலைவரும், இணக்க சபை நிறைவேற்று உறுப்பினருமாகிய கந்தவனம் சீவரட்ணம் நேற்று காலை [24-4-86] காலமானுர். இவர் இராசம்மாவின் அன்புக் கணவரும், ஜெயக்குமார், விஜயகுமார் [ஜெர்மனி], சாந்தகுமாரி, வசந்தகுமாரி, புஸ்பகுமாரி ஆகியோரின் அன்புத் தந்தையும், இராமச்சந்திரன் [S. K. Company Kandy], கோபாலசுந்தரம் [Seaman], லீலாவதி, சிவகாந்தி ஆகியோரின் அன்பு மாமனுரும், செல்வவினயகம், சரஸ்வதி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார். அன்னுரின் ஈமக்கிரியைகள் [25-4-86] இன்று அவரது இல்லத்தில் நடைபெற்று காலை 10 மணிக்கு தகனக்கிரியைக்காக எள்ளங்குளம் மயானத்திற்கு எடுக்துச் செல்லப்படும். உற்ருர், உறவினர், நண்பர்கள் அனைவரும் இவ்வறிவித்தலை ஏற்று அன்னரது ஈமக்கிரியையில் கலந்துகொள்ளும்படி அன்புடன் வேண்டுகிறோம்

தகவல்;- திருமதி சீ. இராசம்மா, 'புஸ்பவாசா', கொற்ருவத்தை, வல்வெட்டித்துறை. [C 1980]

### திருமதி மனேன்மணி தம்பிராசா

திருமதி மனேன்மணி தம்பிராசா காலமானுர். இவர் காலம் சென்ற ஓவசியர் தம்பிராசாவின் அன்பு மனைவியும், ஞானசம்பந்தன் (பொறியியலாளர் தன்சானியா) சிவசுப்பிரமணியம் (கொழும்பு), சண்முகராசா (முன்னுள் சிங்கர் கொம்பனி முகாமையாளர், யாழ்ப்பாணம்), பவளரெத்தினம், சந்திரவதனு, மனேஹரன் (ஆசிரியர், அனலைதீவு), லலிதாராணி, மனேராணி ஆகியோரின் அன்புத்தாயாரும், புஸ்பராணி (U K.) நேசமலர், கனகராசன் (ஓய்வுபெற்ற ஓவசியர்), பாலசிவனேஸ்வரி (ஆசிரியை, அனலைதீவு), இறைவன் (நீர்ப்பாசன திணைக்களம்), சிவகாலன் (இலங்கை வங்கி, யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மாமியாரும், நாகரெத்தினம் (கொக்குவில்), வள்ளியம்மா (நீராவியடி) ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார். அன்னுரின் ஈமக்கிரியைகள் 25-04-86 (இன்று) வெள்ளிக்கிழமை காலை 10-30 மணிக்கு நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும் உற்ருர், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

61, அரசடி வீதி, யாழ்ப்பாணம். (C 1976)

### தண்டிகை சுப்பிரமணியம்

இளவாலையைச் சேர்ந்தவரும் (கொல்லங்கலட்டியில் பிறந்தவருமான) இளைப்பாறிய புகையிரதநிலைய அதிபர் தண்டிகை சுப்பிரமணியம் (செல்லக்குட்டி) இறைவனடி சேர்ந்தார் இவர் ஞானேஸ்வரியின் அன்புக் கணவரும், ராஜேஸ்வரி, மகேஸ்வரி [ஆசிரியை, யாழ்/ சன்மார்க்க ம வி ], புவனேஸ்வரி (விரிவுரையாளர், கோப்பாய் ஆசிரியர் கலாசாலை), ஜெகதீசன் (முன்னுள் உதவி ஆசிரியர், ஈழநாடு / லண்டன் முரசு, கணக்கியல்பகுதி பட்டெக்ஸ் பிளாஸ்டிக் நிறுவனம், லண்டன்) ஆகியோரின் அருமைத்தந்தையும், அருந்ததி [பலாலி ஆசிரியர்கலாசாலை, வாசுகி (யாழ் யூனியன் ரஸ்ட் இன்வெஸ்ட்மென்ட் லிமிட்), தமயந்தி [வேம்படி மகளிர் கல்லூரி], சஞ்ஜபன் (பரியோவான் கல்லூரி], புவிராம், கஜதிபன், சர்வதனன் ஆகியோரின் ஆசைப்பேரனும், காலஞ்சென்ற செந்தில்வேல்ராஜா [சுங்க இலாகா], காலஞ்சென்ற சதிர்காமத்தம்பி [அரச கணக்குப்பகுதி], ராமக்கிருஷ்ணு [பொறியியல் பகுதி புறவுண்ஸ் நிறுவனம்], திருமகள் ஆகியோரின் பெருமைமிக்க மாமனுமாவார். அன்னுரின் ஈமக்கிரியைகள் [24- 4- 86] வியாழன் நேற்று மாலை நடைபெற்றது. இவ்வறிவித்தலை உற்ருர், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகின்ருேம். —மனைவி, மக்கள். [C1977]